பக்கங்கள்: பத்து

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:17 வள்ளுவர் ஆண்டு 2032 மார்கழி 09 திங்கட்கிழமை (24-12-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:29

## நோர்வே உதவியுடன் ஜனவரியில் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பம்!

### இந்தியத் தலைவர்களிடம் பிரதமர் தெரிவிப்பு

புதுடில்லி,டிசெ.24

நோர்வே அரசின் உதவியுடன் புதிய சமாதான நடவடிக்கைகள் பெரும்பாலும் அடுத்த மாதம் ஆரம்பிக்கப்படும்.

- இவ்வாறு தெரிவித்திருக்கிறார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.

இந்தியாவில் விஜயம் மேற்கொண்டிருக்கும் பிரதமர், நேற்று புதுடில்லியில் இந்திய வர்த்தக அமைச்சர் முரசொலிமாறனுடன் பேச்சுநடத்திய போது இதனைத் தெரிவித்தார்.



புதிய சமாதான நடவடிக்கைகளில் நோர்வேயின் பிரதமரும் பங்குகொள்ளக்கூடும் என்று பிரதமர் அப்போது கூறியதாக இலங்கை வானொலி தெரிவித்தது.

சமாதானத் தீர்வு முயற்சிகளில் விடுதலைப் புலிகள் காட்டியுள்ள சாதகமான சமிக்ஞைகளை உரியமுறையில் பயன்படுத்தி நல்லதொரு சந்தர்ப்பத்தை உருவாக்கிக் கொள்ளுமாறும் -

அத்தகைய நிலைமை ஏற்பட்டால் இலங்கையில் பொருளாதார, அரசியல் ரீதியிலான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு இந்தியா முழு ஒத்துழைப்பையும் வழங்கும் எனவும் -

முரசொலிமாறன் பிரதமரிடம் தெரிவித்தார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக அமைச்சர்களின் மாநாடு அடுத்த பெப்ரவரி மாதத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, நேற்று முன்னாள் இந்தியப் பிரதமர் பி.வி.நரசிம்ம (10ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா தாக்குதலில் கான்ஸ்டபிள் மரணம்!

### நேற்று மாலை சம்பவம்

வவுனியா,டிசெ.24

வவுனியா ஹெப்பிட்டிகொலாவ என்னும் இடத்தில் இருந்து ஏழு மைல் தொலைவில் உள்ள தட்டுவெவ பகுதியில் நேற்றுமாலை இனந்தெரியாதோர் நடத்திய தாக்குதலில் பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவர் உயிரிழந்தார் மற்றொரு பொலீஸார் படுகாயமடைந்தார். விடுதலைப் புலிகளே பதுங்கியிருந்து இத்தாக்குதலை நடத்தியதாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

பொலீஸ் காவலரண் ஒன்றில் இருந்து மற்றொரு காவலரணுக்கு சைக்கிளில் சென்ற பொலீஸார் மீதே விடுதலைப் புலிகள் ஒளிந்திருந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும் -

இதையடுத்துப் படையினர் அந்தப் பகுதியைச் சுற்றிவளைத்துத் தேடுதல் நடத்தியதாகவும் -

பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிததன -

இந்தச் சம்பவத்தில் உயிரிழந்த பொலீஸாரின் சடலம் வவுனியா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. காயமடைந்தவர் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக அநுராதபுரம் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக விடுதலைப் புலிகள் தரப்புத் தகவல்கள் எதுவும் உடனடியாக வெளியாகவில்லை. விடுதலைப் புலிகளும், அரசாங்கமும் அறிவித்துள்ள ஒரு மாதகால யுத்தநிறுத்தம் மற்றும் மோதல் தவிர்ப்பு என்பன இன்று நள்ளிரவு முதல் அமுலுக்கு வரவிருப்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-6-9)

# செயலகத்தை முற்றுகையிட்டு இன்று முதல் மறியற் போர்!

## திருக்கேதீஸ்வரத்துக்கு அமைச்சர் குழு விஜயம்

### திருத்தவேலை ஜன. 3இல் ஆரம்பம்

வவுனியா,டிசெ.24

திருக்கேதீஸ்வரம் ஆலயப் புனரமைப்புப் பணிகளை அடுத்த மாதம் 3ஆம் திகதி ஆரம்பிக்குமாறு இந்து விவகார அமைச்சர் தி.மகேஸ்வரன் உத்தரவிட்டிருக்கிறார்.

அடுத்த சிவராத்திரி தினத்துக்கு முனனர் அங்கு ஆகம முறைப்படி சகல பூஜை வழிபாடுகளையும் ஆரம்பிக்க ஏற்பாடுகளைச் செய்யுமாறும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைப் பணித்திருக்கிறார்.

நேற்று ஆலயத்துக்கு விஜயம் செய்து சேதங்களைப் பார்வையிட்ட பின்னர் மன்னார் செயலகத்தில் அமைச்சர் மகேஸ்வரன் மாநாடு ஒன்றை நடத்தினார். அமைச்சருடன் படை அதிகாரிகள் மற்றும் அமைசசு அதிகாரிகளும் உடன் சென்றிருந்தனர்.

திருக்கேதீஸ்வரம் ஆலயத்துக்கான மின்சாரம், தொலைபேசி, நீர் விநியோகம் ஆகிய வசதிகளை தனது அமைச்சின் நிதி மூலம் விரைவில் வழங்குவதாக அமைச்சர் அங்கு தெரிவித்தார். முன்னதாக நேற்று வவுனியா சென்றடைந்த அமைச்சர் மகேஸ்வரன், அங்கு வவுனியா அரச அதிபருடன் பேசசு நடத்தினார். பூந்தோட்டம் அகதி முகாமையும் சென்று பார்வையிட்டார். (ஐ-164)

### மன்னாரில் இளைஞன் சுட்டுக்கொலை

மன்னார்,டிசெ.24

மன்னார் கீரி பகுதியில் நேற்று முன்தினம் இரவு குடும்பஸ்தரான பிரதீபன் (வயது - 23) என்பவர் வீட்டில் வைத்து இனந்தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார். இச்சம்பவத்தில் அவரது மனைவியும் படு (10ஆம் பக்கம் பார்க்க)

## காணாமற்போனோரின் உறவினர்கள் காலவரையறையற்ற போராட்டம்

கொழும்பு,டிசெம்பர்24

**காணாமற் போனோரின் பெற்றோர்கள் மற்றும் உறவினர்கள் இன்று முதல யாழ்.அரச செயலகத்தை முற்றுகையிட்டு தொடர்ச்சியான மறியற் போராட்டத்தை ஆரம்பிக்கின்றனர்.**

**குடாநாட்டில் 96 - 97ஆம் ஆண்டு காலப்பகுதியில் படையினரால் கைது செய்யப்பட்ட பின்னர் காணாமற்போன பல நூற்றுக்கணக்கானோரின் விடயத்தில் ஆட்சியாளர்களும் பொறுப்புவாய்ந்த அதிகாரிகளும் காட்டிவரும் அலட்சியப் போக்கை ஆட்சேபித்தும் தங்கள் கோரிக்கைகளுக்கு உடனடியாகப் பதிலளிக்குமாறு கேட்டும் இந்தப் போராட்டம் நடத்தப்படுவதாக காணாமற் போனோரின் பாதுகாவலர் சங்கமும், அன்னையர் முன்னணியும் கூட்டாக அறிவித்திருக்கின்றன.**

இன்று காலை யாழ்.செயலகப் பகுதியிலும் யாழ்.பிரதேச செயலகத்துக்கு அருகிலும் இரு அணிகளாக ஒன்றுகூடவுள்ள உறவினர்கள், இந்த இரு அலுவலகங்களையும் இயங்கவிடாமல் தடுத்து அவற்றை முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபடுவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைதுசெய்யப்பட்டுக் காணாமற்போனோரில் 167 பேர் வன்செயல்களால் கொல்லப்பட்டுள்ளனர் என்று வடபகுதி புனரமைப்பு அதிகாரசபையின் ஊடாக அரசாங்கம் அனுப்பிய பதிலை ஏற்கமுடியாது. அதை அரசு (10ஆம் பக்கம் பார்க்க)

## இன்றும் நாளையும் ஊரடங்கு நீக்கம்!

யாழ்ப்பாணம், டிசெ.24

நத்தார் பண்டிகையை முன்னிட்டு குடாநாட்டில் இன்றும் நாளையும் ஊரடங்குச் சட்டம் முற்றாக நீக்கப்பட்டிருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கிறிஸ்தவ மக்களின் நன்மை கருதி இந்த இரு தினங்களும் ஊரடங்கு முற்றாக நீக்கப்படுவதாக பலாலியில் உள்ள யாழ்.படைகளின் தலைமையகம் நேற்று விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (ஐ)

## நீதித்துறைக்கும், நாடாளுமன்றத்துக்கும் ஜனாதிபதி பதிலளிக்கும் நிலை வரும்

### அரசமைப்புச் சட்டத்தில் விரைவில் திருத்தம்

கொழும்பு,டிசெ.24

ஜனாதிபதி நாடாளுமன்றிற்கும், நீதித்துறைக்கும் பதிலளிக்கும் வகையில் அரசமைப்புச் சட்டத்தில் திருத்தங்களை அரசு மிக விரைவில் ஏற்படுத்தவிருக்கிறது.

ஜனாதிபதிக்கிருக்கும் சட்ட விலக்குரிமையை அகற்றுவது என்று ஐ.தே. முன்னணி தேர்தல் வாக்குறுதிகளை அளித்திருந்தது. அரசமைப்பு விவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸுக்கு அரசின் இத்தீர்மானம் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

எஸ்.பி.திஸாநாயக்க தன்னை 'வஞ்சகி' என்று கூறியது தொடர்பான விசாரணைகளை நடத்துவதற்கு வசதியாக தன்மீதுள்ள சட்டவிலக்குரிமையை விலக்கும்படி அண்மையில் ஜனாதிபதியே அரசாங்கத்தைக் கேட்டிருந்தார். இதனைத் தொடர்ந்து அது பற்றிய விவகாரங்கள் தீவிரமடைந்துள்ளன.

ஜனாதிபதியின் கோரிக்கைக்கு மதிப்பளிக்கும் வகையில் இது தொடர்பாக விசாரணையொன்று நடத்தப்படும் என்று அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்திருக்கின்றன.

கோரிக்கை ஜனாதிபதியிடமிருந்தே வந்திருப்பதால் அதனை நிறைவேற்றுவதற்கு வேண்டிய மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மைக்கு பொ.ஐ.மு.தனது ஆதரவை வழங்கும் ஜே.வி.பியும் ஆதரவு வழங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ)

## கிறிஸ்தவ தேவாலயங்களில் இன்று நள்ளிரவு ஆராதனை

யாழ்ப்பாணம்,டிசெ.24

யேசு கிறிஸ்துவின் பிறப்பைக் குறிப்பிடும் நத்தார் நள்ளிரவு ஆராதனை குடாநாட்டில் உள்ள கிறிஸ்தவ ஆலயங்களில் இன்று நள்ளிரவு நடைபெறவிருக்கிறது.

இரவு ஊரடங்கு இன்றும் நாளையும் முற்றாக நீக்கப்பட்டிருப்பதால் இன்று நடைபெறும் நள்ளிரவு ஆராத (10ஆம் பக்கம் பார்க்க)

# எம்.பிக்கள் குழுவினர் நேற்று களுத்துறைச் சிறைக்கு விஜயம்

## கைதிகள் பிரச்சினைகளை நேரில் அறிந்தனர்

கொழும்பு,டிசெ.24

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ரெலோ அமைப்பின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் நேற்றுக் காலை களுத்துறைச சிறைச்சாலைக்குச் சென்று அங்கு தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியற கைதிகளைச் சந்தித்து உரையாடியுள்ளார். இவருடன் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான ஞா.கிருஸ்ணபிள்ளை (வெள்ளிமலை), த.தங்கவடிவேல் ஆகியோரும் சென்றிருந்தனர்.

இச்சிறைச்சாலையில் எந்தவித குற்றமும் சுமத்தப்படாத 359 அரசியற் கைதிகளும் தண்டனையை அனுபவிக்கும் 20 கைதிகளும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இக்கைதிகளுடன் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உரையாடினார்கள்.

எந்தவித விசாரணையுமின்றி ஆறு வருடங்களுக்கு மேலாகப் பலர் களுததுறைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் சிலருடைய மனைவி மற்றும் பிள்ளைகள் வேறு சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதால் அவர்களுக்கிடையில் எந்தவொரு தொடர்பும் இல்லாமல் இருப்பதாகவும் கைதிகள் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் தெரிவித்தனர்.

எந்தவித குற்றமும் புரியாத தங்களை உடன் விடுதலை செய்ய வேண்டும். இல்லாவிட்டால் தமக்கெதிராக வழக்குத் தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று இக்கைதிகள் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் தெரிவித்தனர்.

சிலருக்கு எதிராக வழக்குத் தாககல் செய்யப்பட்ட போதிலும் அரச தரப்பு சாட்சிகள் அல்லது தம்மைக் கைதுசெய்த படை அதிகாரிகள் நீதிமன்றுக்கு வராமல் விடுவதால் வழக்கு விசாரணைகள் இழுத்தடிக்கப்படுவதாகவும் இவர்கள் தெரிவித்தனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் கைதிகள் கூறியவற்றை நன்கு கேட்டறிந்து கொண்டனர்.

அங்கு செல்வம் அடைக்கலநாதன தெரிவித்ததாவது:-

"சிறிலங்காவில் தற்போது ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சி அமைத்துள்ளது. இந்த அரசுக்கு நாங்கள் தமிழ் மக்களின் பல்வேறுபட்ட கோரிக்கைகளை முன்வைத்து அழுத்தம் கொடுககவுள்ளோம். அதில் தமிழ் அரசியற் கைதிகளின் விடுதலையும் ஒன்றாகும். எனவே உங்கள் கோரிக்கைகளை விரைவில் நாங்கள் அரசாங்கத்திடம் எடுத்துக் கூறுவோம். ஆனால் இதற்கு அரசு செவிசாய்க்காவிட்டால் அதற்கு எதிராக சட்டத்தரணிகள் மற்றும் மனிதநேய அமைப்புகளைத் திரட்டி நாம் பல சாத்வீகப் போராட்டங்களை நடத்துவோம். இச்சந்திப்பு இன்றுடன் முடிவடையப் போவதில்லை. நாங்கள் தொடர்ந்து உங்களை வந்து சந்திப்போம். அத்துடன் அரசுக்கும் உங்கள் விடுதலை தொடர்பாகத் தொடர்ந்து அழுத்தம் கொடுத்து வருவோம்" - என்றார்.

இதேவேளை -

இந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்றுமுன்தினம் வெலிக்கடைச சிறைச்சாலைக்குச் சென்று அங்கு தடுத்துவைக்கப்பட்டுள்ள பெண் கைதிகளைப் பார்வையிட்டனர். அங்கு 63 பெண் அரசியற் கைதிகளும் 4 சிறுவர்களும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

விரைவில் பூஸா தடுப்பு முகாமுககும் சென்று அங்கு தடுத்துவைக்கப்பட்டுள்ள கைதிகளையும் சந்திக்கவுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார். (ஐ)

## இலங்கையில் சமாதானம் நிலவும் சென்னையில் பிரதமர் ரணில் உறுதி



சென்னை,டிசெ.24

"இலங்கையில் சமாதானம் வரப்போகிறது."

- இப்படிப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சென்னையில் ஊடகவியலாளர்களிடம் தெரிவித்தார்.

சமாதானத்துக்காக நாம் கடுமையாக உழைக்க வேண்டும் என்றும் பிரதமர் சொன்னார்.

தாம் முன்னர் 1993இல் பிரதமரானதும் முதன் முதலில் விஜயம் மேற்கொண்டது இந்தியாவுக்குத் தான். இப்போதும் அப்படியே நடந்திருப்பது குறித்து தாம் மகிழ்ச்சியும் பெருமிதமும் அடைவதாக ரணில் குறிப்பிட்டார்.

மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு டில்லி செல்லும் வழியில் நேற்றுமுன்தினம் பிரதமர் சென்னையில் சிறிது நேரம் தங்கியிருந்தார்.

இந்தியாவுக்கான எனது பயணம் ஒரு நல்லெண்ண விஜயம். இலங்கையில் சமாதான முயற்சிகள் குறித்து இந்தியத் தலைவர்களுடன் இப்பயணத்தில் கருத்துக்களை மட்டுமே பரிமாறிக்கொள்வேன்.

- இவ்வாறு பிரதமர் ரணில் பத்திரிகையாளர்களிடம் கூறினார்.

புதுடில்லி செல்லும் வழியில் சென்னை ஸ்டார் ஹோட்டலில் அவர் சில மணிநேரம் தங்கினார். ஹோட்டலில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

செய்தியாளர்களுடனான உரையாடலில் பிரதமர் ரணில் இரு நாடுகளையும் இணைக்கும் ஒரு பாலம் குறித்தும் குறிப்பிட்டார்.

அவர் குறிப்பிட்டது நட்புப் பாலம் அல்ல. இராமேஸ்வரத்தையும் மன்னாரையும் இணைக்கும் உண்மையான பாலம் குறித்தே அவர் குறிப்பிட்டார்.

தனது யோசனைக்கு இந்தியா இணங்குமேயானால் சாத்தியக்கூறு ஆய்வுகளை மேற்கொள்ளலாம் என்றும் அவர் சொன்னார். (ஐ)

## யுத்தத்தினால் குருநகரில் மட்டும் 240 பெண்கள் விதவைகளாகினர்

யாழ்ப்பாணம்,டிசெ.24

யுத்த நடவடிக்கைகள் மற்றும் வன செயல்கள் காரணமாக குருநகர்ப் பகுதியில் மட்டும் 240 குடும்பப் பெணகள் தங்கள் கணவன்மாரை இழந்து விதவைகளாகி உள்ளனர்.

குருநகர்பகுதி துணை இழந்தோர் மாதர் சங்கத்தினரால் திரட்டப்பட்ட புள்ளிவிவரம் மூலம் இது தெரியவந்திருக்கிறது.

இந்தப் பகுதியில் சுமார் ஆயிரத்து 500 குடும்பங்கள் வசிக்கின்றன. அவர்களில் மொத்தமாக 340 பேர் விதவைகளாக உள்ளனர். அதில் 240 பெண்களின் கணவன்மார் படையினரால் கடலில் தொழில் செய்யும்போது சுடப்பட்டும், பிடித்துச் சென்று கொலை செய்யப்படும், குண்டு வீச்சுகளால் இறந்தும் உள்ளதாகத் தெரியவந்துள்ளது.

இந்த 240 விதவைப் பெண்களுககும் 'கியூடெக்' நிறுவனம் சுய தொழிலை ஊக்குவிக்கும் பொருட்டு கடன் உதவிகளை சுழற்சி முறையில் வழங்கியுள்ளது. அத்துடன் தையல், உபஉணவு தயாரித்தல் போன்ற வேலை வாய்ப்புகளையும் ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. (ஐ-180)

## அரசின் மோதல் தவிர்ப்பை வரவேற்கின்றது ஈ.பி.டி.பி.

யாழ்ப்பாணம்,டிசெ.24

அரசு இன்று நள்ளிரவு முதல் பிரகடனப்படுத்தியிருக்கும் மோதல் தவிர்ப்பை ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.) வரவேற்றிருக்கிறது.

இது தொடர்பாகக் கட்சி விடுத்திருக்கும் ஓர் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

அரசாங்கம் மோதல் தவிர்ப்பைப் பிரகடனப்படுத்தியுள்ளதை ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி உளப்பூர்வமாக வரவேற்கின்றது. சமாதானத்தை ஏற்படுத்தும் நடவடிக்கைகளுக்கு வழியேற்படுத்தும் வகையில் நல்லெண்ண வெளிப்பாடாக இப்பிரகடனம் அமைந்துள்ளமை மகிழ்ச்சி தருவதாகும்.

அரசாங்கத்தின் இப்பிரகடனமானது சட்டத்தையும், ஒழுங்கையும் மதிக்கும் சாதாரண பிரஜைகள் துன்பங்களுக்கு உள்ளாவதற்கு அனுமதி அளிப்பதாக இருக்காது என்றே நம்புகின்றோம். ஏனெனில் ஓட்டமாவடிப் பகுதியில் வசிக்கும் முஸ்லிம் பிரமுகர்கள் சிலா சமாதான சமிக்ஞைகள் வெளிப்பட்ட பின்னரும்கூட இனம் காணப்படாத ஆயுதபாணிகளால் கடத்திச் செல்லப்பட்டுள்ளனர். அதேபோல திருகோணமலை நகரை அடுத்துள்ள மானாண்ட குளம் பகுதியில் விறகு சேகரிப்பதற்காக மாட்டுவண்டியில் சென்றவர்கள் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உள்ளனர்.

நிம்மதியான வாழ்வுக்கு அச்சுறுததலாக அமையும் இத்தகைய சம்பவங்கள் தொடர்வதை வன்மையாகக் கண்டிக்கிறோம். இந்த வகையான துர்ப்பாக்கியச் சம்பவங்கள் தொடரக் கூடாது என்றே விரும்புகிறோம்.

எனவே மோதல் தவிர்ப்பை அரசாங்கம் கடைப்பிடிப்பதை, வரவேற்கும் அதேசமயம் நாட்டு மக்கள் அனைவரதும் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் பொறுப்பில் இருந்து விலகி விடுவதற்கு மோதல் தவிர்ப்பு ஒரு காரணமாகாது என்பதையும் சொல்லி வைக்க விரும்புகிறோம்.

- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## தவறி வீழ்ந்து! காயமடைந்த பெண் மரணம்

யாழ்ப்பாணம்,டிசெ.24

நிலத்தில் தவறிவிழுந்த வயோதிபப் பெண் ஒருவர் தலையில் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சையின் போது நேற்று உயிரிழந்தார்.

சுழிபுரத்தைச் சேர்ந்த இராசாத்தி (வயது-65) என்ற பெண்ணே உயிரிழந்தவராவார். இவரது சடலம் பிரேத பரிசோதனைகளின் பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

## பாதுகாவலர் சங்கத்தின் மறியற்போருக்கு தொழில்நுட்பக் கல்லூரி மாணவர் ஆதரவு

யாழ்ப்பாணம்,டிசெ.24

குடாநாட்டில் காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கமும், அன்னையர் முன்னணியும் இணைந்து, யாழ்.செயலகம் முன்பாக இன்று முதல் மேற்கொள்ளவிருக்கும் தொடர்ச்சியான மறியற் போராட்டத்துக்கு யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி மாணவர் ஒன்றியம் தனது முழு ஆதரவைத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக மாணவர் ஒன்றியம் விடுத்திருக்கும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

யாழ்.குடாநாடு அரசபடைகளின் வசமான பின் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிய அப்பாவிப் பொது மக்கள் பலர் சிறீலங்கா இராணுவத்தால் கைதாகி இன்றுவரை அவர்களின் நிலை தெரியாமல் உள்ளது. இவர்களில் 400 பேருக்கு மேற்பட்டவர்கள் படுகொலை செய்யப்பட்டதாக ராஜபக்ஷ என்னும் இராணுவச்சிப்பாய் உறுதிப்படுத்தியுள்ளார். ஆனால தனது ஆட்சிக்காலத்தில் இவை எதுவும் நடக்கவில்லை என சாதித்து வந்த சந்திரிகா அரசு காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கத்தினதும், மனித உரிமை அமைப்பினதும் அழுத்தங்களை சமாளிக்க முடியாமல் இறுதியாக காணாமற்போனோரின் கொலைகள் இராணுவத்தால் நடத்தப்பட்டவை என்ற உண்மையை மறைத்து 167 பேருக்கு மட்டும் மரணச்சான் றிதழ் வழங்கியுள்ளது.

தமிழரின் பிரதிநிதி தாங்களேனத் தமக்குத்தாமே கூறிக்கொண்டு அரச படைகளின் தமிழின அழிப்புக்குத் தோள்கொடுத்தபடி உலகின் கண்களுக்கு இப்படுகொலைகள் மூடி மறைத்து வந்த தமிழ்க்குழு ஒன்று இன்று தமிழ்மக்களால் தூக்கி வீசப்பட்டுள்ளது. அதேபோல் சமாதானத்துக்கு எதிரான சக்திகள் தென்னிலங்கையிலும் ஓரங்கட்டப்பட்டுள்ளன. இந்நிலையில் ஆட்சி அமைத்துள்ள புதிய அரசாங்கமாவது உடன் பிறப்புக்களுக்கு என்ன நேர்ந்தது எனத் தெரியாது பரிதவித்துப் போயுள்ள இவர்களுக்கு காணாமற் போனோரின் நிலையைத் தெரியப்படுத்த முன்வர வேண்டும்.

இன்று நடைபெறவுள்ள மறியற் போராட்டத்துக்கு சகல அமைப்புக்களும் முழு ஆதரவு வழங்க முன்வர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறோம் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.(ஐ)

## காய்ச்சலால் பீடிக்கப்பட்ட மேலும் இருவர் மரணம்!

யாழ்ப்பாணம்,டிசெ.24

காய்ச்சலினால் பீடிக்கப்பட்ட நிலையில் யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதிககப்பட்டிருந்த ஆறுமாதக் குழந்தையும், குடும்பஸ்தர் ஒருவரும் நேற்று உயிரிழந்தனர்.

மந்துவில் பகுதியில் இருந்து இடம் பெயர்ந்து சங்கரத்தைப் பகுதி யில் வசித்துவந்த சின்னத்தம்பி யோகராசா (வயது 55) என்ற குடும்பஸ்தர் மூளை மலேரியாவால் உயிரிழந்தார். கடந்த மூன்று தினங்களாக இவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. எனினும் நேற்று அவர் மரணமானார்.

அரியாலையில் இருந்து இடம் பெயர்ந்து கொக்குவில் சம்பியன் லேனில் வசித்து வந்த கஜேந்திரன் ரிசிகரன் என்ற ஆறுமாத ஆண் குழந்தையும் நேற்று மாலை உயிரிழந்தது. கடந்த 15 ஆம் திகதி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட இக் குழந்தைக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வநதது.

நேற்று உயிரிழந்த குடும்பஸ்தரின் சடலமும், குழந்தையின் சடலமும் நேற்றுமாலை உறவினர்களிடம் கையளிக்கப்பட்டன.

இவர்களுடன் சேர்த்து கடந்த சில தினங்களில் காய்ச்சலால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை மூன்றாக உயர்ந்துள்ளது.

(ஐ-6-9-15)

## கிழக்கில் படையினரின் வழமையான சோதனைகளில் மாற்றமில்லை

மட்டக்களப்பு,டிசெ.24

மட்டக்களப்பு மாவட்டத்தில் படையினரின் சோதனைச் சாவடிகளில் சோதனைக் கெடுபிடிகள் குறையவில்லை. சகல சோதனைச்சாவடிகளிலும் மக்கள் வாகனங்களிலிருந்து இறக்கப்பட்டு நீண்டதூரம் நடந்து சென்று சோதனைகளை முடித்துக் கொண்டே செல்கின்றனர்.

இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதிகளிலிருந்து வரும் மக்களும் பலத்த சோதனைகளின் பின்பே நகருக்கு வர அனுமதிக்கப்படுகின்றனர்.

இன்று நள்ளிரவு முதல் போர் நிறுத்தம், மோதல் தவிர்ப்பு ஆகியன அமுலுக்கு வந்தாலும் படையினரின் சோதனைச் சாவடிகளில் வழமையான சோதனை நடவடிக்கைகள இருக்கும் என்றும் வீதிரோந்து நடவடிக்கைகள் இடம்பெறும் என்றும் படைவட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இக்காலப்பகுதியில் ஆயுதங்களுடன் யாராவது காணப்பட்டால் அவர்கள் மீது தாக்குதல் நடத்தப்படும் என்றும் படையினர் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டால் பதில் தாக்குதல் மேற்கொள்ளப்படும் என்றும் படைவட்டாரங்கள் தெரிவித்துள்ளன.(ஐ)

## பனங்கட்டி உற்பத்தி தொழிற்சாலை இணுவிலில் அமைக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம்,டிசெ.24

யாழ்ப்பாணம் பனை அபிவிருத்திச் சபையின் ஆதரவுடன் கோண்டாவில் பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் பனங்கட்டித் தொழிற்சாலை ஒன்றினை அமைக்கவுள்ளது.

இணுவில் ரயில் நிலையத்துக்கு அருகில் அமைந்திருக்கும் சங்கக் காணியில் இந்தத் தொழிற்சாலையை அமைப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது.

பனங்கட்டித் தொழிற்சாலைக்குரிய இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் அனைத்தையும் பனை அபிவிருத்திச் சபை வழங்கியுள்ளது.

இந்தத் தொழிற்சாலைக்குரிய கட்டடத்தை அமைப்பதற்குரிய நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் -

தொழிற்சாலை இயங்க ஆரம்பித்தால் சிலல் தொழிலாளர்கள் மிகவும் நன்மையடைவார்கள் எனவும் -

சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-4)

## திருவாசக முற்றோதல்

யாழ்ப்பாணம்,டிசெ.24

நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் நாளை மறுதினம் புதன் கிழமை காலை 8 மணிக்கு திருவாசகம் முற்றோதல் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெறவுள்ளது. (ஐ-4)

## அமைச்சர்களோடு இனிமேல் பாதுகாப்பு வாகன அணி வராது!

அமைச்சர்கள் பயணம் செய்யும் பொழுது அவர்களது உத்தியோகபூர்வ வாகனத்துக்கு முன்னாலும் பின்னாலும் பாதுகாப்பு வாகன அணி இனிச் செல்லாது. அதற்குப் பதிலாக ஒரு பாதுகாப்பு அதிகாரி மட்டும் அமைச்சரின் வாகனத்தில் செல்வார்.

கடந்த வாரம் நடைபெற்ற அமைச்சர்களின் கூட்டத்தில் இவ்வாறு தீர்மானிக்கப்பட்டது என்று அரசாங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அமைச்சர்களின் பாதுகாப்புக்கு வாகன அணிகள் செல்வதால் வீதிகளில் ஏனைய வாகனங்களுக்கும் பாதசாரிகளுக்கும் பெரும் இடைஞ்சல்கள் ஏற்படுகின்றன. இது குறித்து அமைச்சர்கள் ஆராய்ந்தனர்.

அமைச்சர்களின் பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த சில அதிகாரிகள், இல்லாத பீதியை உருவாக்கி அமைச்சர்களைத் தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்க நடவடிக்கை மேற்கொள்கின்றனர் என்று சில அமைச்சர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த நிலைமையை ஆராய்ந்த அமைச்சர்கள், சாதாரணமான பயணங்களின்போது பாதுகாப்பு வாகனங்களின் உதவியைப் பெறுவதில்லை என்று தீர்மானித்தனர். அச்சுறுத்தல் உள்ள பிரதேசங்களில் மட்டுமே பாதுகாப்பு வாகனங்களின் சேவை பெறப்படும். (ஐ)

# அமெரிக்கப் பயணிகள் விமானத்தை வானில் தகர்க்கும் முயற்சி முறியடிப்பு!

## 197 உயிர்கள் காப்பாற்றப்பட்டன

பரீஸ்,டிசெ.24

பிரான்ஸின் பரீஸ் நகரில் இருந்து அமெரிக்காவின் மியாமிக்கு நேற்று முன்தினம் சென்று கொண்டிருந்த அமெரிக்கன் ஏயார் லைன்ஸ் விமானத்தில் பயணி ஒருவர் நவீன வெடி பொருள்களை வைத்திருந்ததாகச் சந்தேகித்ததையடுத்து அந்த விமானம் பொஸ்டனுக்குத் திருப்பிவிடப் பட்டது.

பயணி ஒருவர் தனது காலணியில் மறைத்து வைத்திருந்த வெடி மருந்தை பற்றவைக்க தீக்குச்சியைக் கொளுத்தியபோது, சந்தேகமடைந்த மற்றைய பயணிகளும்

உலக அரங்கில்

பணியாளர்களும் அவரை மடக்கிப் பிடித்தனர்.

அந்த நபர் வைத்திருந்த பிரிட்டிஷ் கடவுச்சீட்டு போலியாக இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது. அவர் இப்போது பொஸ்டனில் எவ்.பி.ஐ. விசாரணைக்கு உட்படுத்தப் பட்டுள்ளார்.

அந்த விமானத்தில் 185 பயணிகளும், 12 பணியாளர்களும் இருந்ததாகக் கூறப்படுகிறது.

ஆப்கானிஸ்தான் மீதான அமெரிக்கத் தாக்குதல்களுக்கு அல்கெய்டாவினர் மேற்கொண்ட பதிலடி நடவடிக்கை முயற்சியாக இது இருக்கலாம் என்று பென்டகன் சந்தேகம் வெளியிட்டது. (ஒ-4-6-9)



ஆப்கானில் நேற்றுமுன்தினம் அமெரிக்க விமானங்கள் நடத்திய தாக்குதலில் பழங்குடி தலைவர்கள் பயணித்த 15 கார்கள், 10 வீடுகள், ஒரு மசூதி ஆகியவை சேதமடைந்தன. தாக்குதலுக்கு இலக்கான பகுதியை பொதுமக்கள் பார்வையிடுவதைப் படத்தில் காணலாம்.

# ஜப்பானியக் கடலில் தென்பட்ட மர்மக் கப்பல் தாக்கி மூழ்கடிப்பு!

## அதிலிருந்த பணியாளர்கள் கடலுக்குப் பலி!!

டோக்கியோ,டிசெ.24

கிழக்குச் சீனக் கடற்பகுதி அருகே தென்பட்ட மர்மக் கப்பல் ஒன்றை ஜப்பானியக் கடற்படைக் கப்பல்கள் தாக்கி மூழ்கடித்தன. இதில் மர்மக் கப்பலில் இருந்ததாக நம்பப்படும் 15 பணியாளர்களும் கடலில் மூழ்கி இறந்திருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

கடந்த வெள்ளிக்கிழமை ஜப்பானிய ரோந்துக் ஹெலிகள் அந்த மர்மக் கப்பலை அவதானித்தன. ஜப்பானின் கரையிலிருந்து 200 கடல் மைல்களுக்கு உட்பட்ட விசேட பொருளாதார கடல் வலயத்துக்குள் சென்று கொண்டிருந்த அந்தக் கப்பலை சோதனையிட ஜப்பானியக் கடற்படைக் கப்பல்கள் முயற்சித்தன.

ஆனால் உத்தரவை மதிக்காது, வேகமாகச் சென்று தப்பிக்க மர்மக் கப்பல் முயற்சித்ததாகவும் -

இதனையடுத்து 25 கடற்படைப் படகுகள் விரட்டிச் சென்று தாக்குதல் நடத்தியதில் நேற்றுமுன்தினம் மர்மக் கப்பல் கடலில் மூழ்கியதாகவும் -

ஜப்பானியக் கடற்படை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கப்பல் மூழ்கிய சமயம் அதிலிருந்த பணியாளர்கள் சுமார் 15பேர் கப்பற் தளத்தில் நின்றிருந்ததாகக் கூறப்படுகிறது. ஆனால் அவர்களது கதி என்ன ஆனது என்பது பற்றித் தெரியவில்லை.

ஜப்பானியக் கடற்படையினருக்கும் மர்மக் கப்பலில் இருந்தவர்களுக்குமிடையே கடும் மோதல் நடந்ததாகவும் -

அப்போது மர்மக் கப்பலில் கேட்ட பாரிய வெடியோசையையடுத்து அது மூழ்கத் தொடங்கியதாகவும் - கூறப்படுகிறது.

சம்பந்தப்பட்ட மர்மக் கப்பல் வடகொரியாவின் உளவுக் கப்பலாக இருக்கலாம் என்றும் சந்தேகம் எழுப்பப்படுவது குறிப்பிடத்தக்கது. (ஒ)



மர்மக் கப்பலை மடக்கும் முயற்சியில் ஜப்பானியக் கடற்படைப் படகு

# அமெரிக்க வான் தாக்குதலில் பின்லேடன் இறந்திருக்கக்கூடும்

## இப்படிக் கூறுகின்றார் அதிபர் முஷாரப்

பெய்ஜிங்,டிசெ.24

ஆப்கானின் தோரா போரா மலைக் குகைகள் மீது, அமெரிக்க விமானங்கள் நடத்திய தாக்குதலில் ஒஸாமா பின்லேடன் இறந்திருக்க மிக அதிகமான சாத்தியம் உள்ளது.

- இவ்வாறு கூறியுள்ளார் பாகிஸ்தானிய அதிபர் ஜெனரல் பர்வேஷ் முஷாரப்.

சீனாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள அவர், சீனத் தேசியத் தொலைக் காட்சிக்கு அளித்த பேட்டியிலேயே இதனைத் தெரிவித்தார்.

ஒஸாமா பின்லேடன் தங்கியிருந்த தோரா போரா தொடர் குகைகள் குண்டு வீச்சுக்களில் முற்றாகத் தகர்க்கப்பட்டு விட்டதாகவும் -

அங்கிருந்து வெளியேற முடியாத நிலையில் பின்லேடன் உயிர்பிழைத்திருக்க வாய்ப்புக் கிடையாது என்றும் -

முஷாரப் மேலும் கூறினார்.

ஆப்கானிஸ்தானுடனான எல்லையைப் பாகிஸ்தான் படைகள் தொடர்ந்து கண்காணித்து வருவதாகத் தெரிவித்த முஷாரப், பின்லேடன் பிடிபட்டால் அமெரிக்காவிடம் ஒப்படைக்கப்படுவார் என்று உறுதி தெரிவித்தார்.

பின்லேடன் பாகிஸ்தானில் கண்டு பிடிக்கப்பட்டால் அமெரிக்காவிடம் ஒப்படைக்கப்படுவாரா என்று கேட்கப்பட்டபோது,

"நிச்சயமாக அவர் ஒப்படைக்கப்படுவார். ஆனால் அவர் தற்போது பாகிஸ்தானில் இல்லை, ஆனால் அதனை நூறு சதவீதம் உறுதிப்படுத்த முடியாது."

- என்று முஷாரப் பதிலளித்தார்.

தோரா போராவிலிருந்து பாகிஸ்தானுக்குள் நுழையப் பயன்படும் பனி மூடிய 8 வழிகளை பாகிஸ்தான் மூடிவிட்டதாகவும் அவர் தெரிவித்தார். (ஒ)



சீனாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் அதிபர் ஜெனரல் பர்வேஷ் முஷாரப் புராதன சீனத் தலைநகரான நியானில் உள்ள பெரிய மசூதியின் இமாம் ஹாஜி மொஹமட் யூ நூசியைச் சந்தித்து உரையாடும் காட்சி.

### பாகிஸ்தானிய அமைச்சரின் சகோதரர் படுகொலை!

இஸ்லாமாபாத்,டிசெ.24

பாகிஸ்தானிய உள்துறை அமைச்சர் மொகினுதீன் கைதரின் சகோதரரை அடையாளம் தெரியாத சிலர் சுட்டுக்கொன்றனர்.

இந்தச் சம்பவம் கடந்த வெள்ளிக் கிழமை இரவு கராச்சியில் இடம் பெற்றது. சமீபகாலமாக தீவிர வாதத்துக்கு எதிராகக் கடும் போக்கை கடைப்பிடித்து வந்ததாகவும் -

இதற்குப் பதிலடியாகவே அவரது சகோதரர் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்றும் - கூறப்படுகிறது. (ஒ-4-6-9)

### கூரை இடிந்து வீழ்ந்ததில் 21பேர் காயம்

தென்னாபிரிக்காவில் பெரும் வியாபார நிறுவனம் ஒன்றின் கூரை நொறுங்கி வீழ்ந்ததில் ஒன்பது மாதக் குழந்தை ஒன்று உட்பட 21 பேர் காயமடைந்தனர்.

கிறிஸ்மஸை முன்னிட்டு வாடிக்கையாளர்களால் கட்டடம் நிரம்பிக் காணப்பட்ட சமயமே கூரை இடிந்து வீழ்ந்துள்ளது. (ம)

# இந்தியாவில் 'விஸா' இன்றி தங்கிய பாகிஸ்தானியர்கள் நாடு கடத்தல்

## ஈழத்தமிழருக்கும் சிக்கல் வரலாம்

புதுடில்லி,டிசெ.24

சட்டபூர்வ அனுமதி இல்லாது இந்தியாவில் தங்கியுள்ள பாகிஸ்தானியர்களைக் கைது செய்து, பாகிஸ்தானுக்கு திருப்பி அனுப்பும் நடவடிக்கைகளை இந்திய அரசு தீவிரப்படுத்தியுள்ளது.

இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் போது, 'விஸா' இல்லாது - அதேவேளை தகுந்த பதிவுகளையும் மேற்கொள்ளாது இந்தியாவில், குறிப்பாக தமிழகத்தில் தங்கியிருக்கும் ஈழத்தமிழர்களும் சிக்கலை எதிர்நோக்க வேண்டியிருக்கும் என்று கூறப்படுகிறது.

தற்போது இந்தியாவில் 13 ஆயிரத்துக்கும் அதிகமான பாகிஸ்தானிய பிரஜைகள் தங்கியிருப்பதாகவும் -

இவர்களைத் தேடிப்பிடித்துக் கைது செய்யும் படி அனைத்து மாநில அரசுகளுக்கும் மத்திய அரசு உத்தரவிட்டிருப்பதாகவும் -

உள்துறை இணை அமைச்சர் வித்தியாசாகர் ராவ் கூறினார்.

இந்த நடவடிக்கையில் பாகிஸ்தானியர் மட்டுமன்றி, சட்டவிரோதமாக நாட்டில் தங்கியுள்ள அனைவர் மீதும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (ஒ-6)

# பயங்கரவாத எதிர்ப்புப் பணியில் நேட்டோவுடன் ரஷ்யா கூட்டு!

பயங்கரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகளை இணைந்து மேற்கொள்வது என்று 'நேட்டோ' அமைப்பில் அங்கம் வகிக்கும் 19 நாடுகளும், ரஷ்யாவும் தீர்மானித்துள்ளன.

இந்த இருபது நாடுகளும் சேர்ந்து புதியதொரு கூட்டமைப்பை உருவாக்கவுள்ளன.

ரஷ்யத் தலைநகர் மொஸ்கோவில் 'நேட்டோ' இணைப்பு அலுவலகம் ஒன்றும் திறக்கப்படவுள்ளது.

இது தொடர்பான பேச்சுக்களில் 'நேட்டோ' உறுப்பு நாடுகள் மற்றும் ரஷ்யாவின பாதுகாப்பு அமைச்சர்கள் கலந்துகொண்டனர்.

'நேட்டோ'வில் ரஷ்யா அங்கத்துவம் பெறுவதற்கான முன்நடவடிக்கைகளாக இவை அமையலாம் என்று ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். (ஒ-9)

# இந்தியக் கப்பலை தடுத்து நிறுத்தி பிரிட்டிஷ் கடற்படை சோதனை

லண்டன்,டிசெ.24

தீவிரவாதிகளுக்கு ஆயுதங்களை ஏற்றிச் செல்வதாகச் சந்தேகிக்கப்படும் கப்பல் ஒன்றை பிரிட்டிஷ் பயங்



சோதனைக்குள்ளாகியிருக்கும் இந்தியக் கப்பல் எம்.வி.நிஷா

கரவாதத் தடுப்பு அதிகாரிகளும் ஸ்கொட்லண்ட்யார்ட் பொலீஸாரும் தடுத்து நிறுத்தி சோதனையிட்டு வருகிறார்கள்.

சர்வதேசக் கடற் பகுதியில் சென்றுகொண்டிருந்தபோது கடந்த வெள்ளிக்கிழமை அதிகாரிகளால் தடுத்து நிறுத்தப்பட்டு, பிரிட்டிஷ் கரையிலிருந்து அரை மைல் தொலைவுக்கு இழுத்து வரப்பட்ட எம்.வி. நிஷா என்ற அந்தக் கப்பலில் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஆயினும் இதுவரை அந்தக் கப்பலில் இருந்து சட்டவிரோதப் பொருள்கள் எதுவும் மீட்கப்படவில்லை என்றும் -

பதிவுசெய்யப்பட்ட 1000 தொன்கள் சீனி மட்டுமே அதில் உள்ளதாகவும் -

அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஆயினும் தாம் தொடர்ந்து சோதனை நடத்தி வருவதாகக் கூறிய அவர்கள், கப்பல் பணியாளர்கள், தமக்கு நன்கு ஒத்துழைப்பதாகவும் கூறினர்.

புலனாய்வுத் தகவல்களின் அடிப்படையிலேயே இந்தக் கப்பல் மடக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

எம்.வி.நிஷா என்ற அந்தக் கப்பல் இந்தியாவின் மும்பையை தலைமையிடமாக் கொண்ட கிழக்கு கப்பல் நிறுவனத்துக்குச் சொந்தமானது என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ)

# ரம்ஸ்பீல்ட் மறுப்பு

ஆப்கானில் அமெரிக்கா நடத்தி வரும் தாக்குதல்கள் முடிவுக்கு வருவதை அடுத்து பயங்கரவாதத்துக்கு எதிரான போரில் அமெரிக்காவின் அடுத்த இலக்கு சோமாலியா என்று வெளியான செய்திகளை அமெரிக்கப் பாதுகாப்புச் செயலர் ரொனால்ட் ரம்ஸ் பீல்ட் மறுத்துள்ளார்.

நேட்டோ உறுப்பினர்களிடையே பேசும்போதே அவர் இந்த மறுப்பை வெளியிட்டார்.

யேமனில் அல்கெய்டா அமைப்பினரைத் தேடி அரசுப் படைகள் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கையில் அமெரிக்கப் படையினரும் ஈடுபட்டனர் என்று வெளியான தகவல்களையும் ரம்ஸ் பீல்ட் மறுத்துள்ளார். (ம)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தவறிவிட்டது

சுரேந்திரன் சதீஸ்கண்ணன் என்பவருடைய தே.அ.அ.(இல.802013302V) மருதனார்மடத்திற்கும் உரும்பிராய்க்கும் இடையில் தவறிவிட்டது. கண்டு எடுத்தவர்கள் சுரேந்திரன் தேநீர் சாலை, மாசியப்பிட்டியில் ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும். (96223)

கைதடி மத்தி, கைதடியைச் சேர்ந்த கந்தையா இலட்சுமியின் விசேட.அ.அட்டை (இல.091046986) யாழ்ப்பாணத்துக்கும் சுன்னாகத்துக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்கூறப்பட்ட விலாசத்தில் ஒப்படைத்து உதவவும். (96230)

## விற்பனைக்கு

சமீரா இன புறோயிலர் குஞ்சுகள் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: வி.குணபாகன், இல.1014, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்; இல. 4, கொழும்புத்துறை வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் பெற்றுக்கொள்ளலாம். **T.P - 3353.** (96207)

வெஸ்பா ஸ்கூட்டர் ஒன்றும் எலக்ரோனிக் வெஸ்பாவும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ச.செல்வம், 166, மானிப்பாய் வீதி, சிவன் கோயில் பின் வீதி, யாழ்ப்பாணம். (96224)

ஆங்கில தட்டச்சு இயந்திரம் **PHOENIX - SIGMA III (JAPAN, NEW) AHUJA UHC - (30W) HORN SPEAKER** என்பன விற்பனைக்கு உண்டு. 154, கன்னாதிட்டி வீதி (சயன்ஸ் அக்கடமிக்கு அருகில்), யாழ்ப்பாணம். (96215)

கட்டில், மேசை, கதிரை, சோக்கேஸ், டிரசிங் ரேபிள் போன்ற வீட்டுத் தளபாடங்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: கே.வீ.சாமி,131/1, அம்பலவாணர் வீதி, அத்தியடி. (96228)

5 நாள் வளர்ச்சியடைந்த பிறிமா இன புறோயிலர் குஞ்சுகள் உடன் விற்பனைக்கு உண்டு. சமீரா இன புறோயிலர் குஞ்சுகள், சிவப்பு பேட்டுக் குஞ்சுகள் 26.12.2001இல் விநியோகிக்கப்பட இருப்பதால் முன் கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளவும். ராஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி. **T.P - 3529, 2867.** (96195)

## புத்தகங்கள்

அராலியூர் ந.சுந்தரம்பிள்ளையின் நூல்கள்: 1. நாடகம் எழுதுவது எப்படி?, 2. யாழ்ப்பாணமா? கொழும்பா? நாடக நூல்கள், 3. யாழ்ப்பாணம் சிறுகதைகள் 4. வீடற்றவன் நாவலின் விளக்கமும் விமர்சனமும், 5. இலக்கியக் கட்டுரைகள் இலக்கிய திறனாய்வு நூல்கள், 6. ஒரு காதலின் கதை நாவல். (96226)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

புறோயிலர், கல்பேட்ஸ் தினமும் சுத்தம் செய்து கொடுக்கப்படும் (நாட்டுக்கோழி உட்பட). 105, புகையிரத வீதி, யாழ்ப்பாணம் (வீரகேசரி அலுவலகத்துக்கும் ஆஸ்பத்திரி வீதிக்கும் இடையில்). (96196)

புறோயிலர் இறைச்சிக்கோழிகள் விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: சிவகுமார், பருத்தித்துறை வீதி, கட்டைப்பிராய்ச் சந்தி. (96170)

## தொழிலாளி படுகாயம்

தென்மராட்சி,டிசெ. 24

கப்பலிலிருந்து பொருள்களை இறக்கிக் கொண்டிருந்த தொழிலாளி மீது எண்ணெய்ப் பரல் சரிந்து வீழ்ந்து அவர் படுகாயமடைந்த சம்பவம் நேற்றுமுன்தினம் பருத்தித்துறையில் இடம்பெற்றது.

கரவெட்டி ஆண்டார்வளவைச் சேர்ந்த குலசிங்கம் ரஜனன் (வயது 23) என்ற இந்த நபர் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (க-117)

## விற்பனையாகின்றது

அபஸ்ரன் சிவசிறீகள்
A/L கடந்த கால
வினாவிடைகள் (2000)
**SLEAS**
கிடைக்குமிடம்:
**சாயி மெடிக்கல்**
பலாலி வீதி,
(அண்ணா கோப்பி அருகில்)
திருநெல்வேலிச் சந்தி, யாழ்ப்பாணம்.
(96224)

# துயர் பகிர்கின்றோம்

பிள்ளையார் மெற்றல் கிறேசர் சக உரிமையாளர்
**திரு. நா.யோகராசா (சாந்தன்)** அவர்களின்
அன்புத்தாயார்

## திருமதி நாகலிங்கம் சின்னம்மா

*(யாழ். பிறவுண் வீதி)*

அவர்கள் இறைபதம் அடைந்த செய்தி அறிந்து, ஆழ்ந்த கவலை அடைந்துள்ளோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!*

பிள்ளையார் மெற்றல் கிறேசர்
சக உரிமையாளர்களான:
ஐ.இராமச்சந்திரன்,
க.மகாலிங்கம்,
ஊழியர்களும்.

*கோட்றோட், மல்லாகம்.* (96236)

# திருவாதவூரர் புராண படன நூல்

## இரண்டாவது பதிப்பு அறிமுக விழா

சைவமணி சி.மருதபிள்ளை ஆசிரியர் உரை எழுதியது.

**26.12.2001 புதன்கிழமை பி.ப. 3.30 மணிக்கு**
சுழிபுரம் மேற்கு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலயத்தில்
நடைபெற திருவருள் பாலித்துள்ளது.

*யாவரையும் கலந்து சிறப்பித்து ஆதரவு நல்குமாறு வேண்டுகின்றோம்.*

- பஜனைச் சபையார் -

(C/19909)

# நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ்.குருநகர் புனித ஆரோக்கியநாதர் ஆலய புனரமைப்பிற்கென ரூபா 75,000 மும், சனசமூக நிலைய புனரமைப்பிற்கென ஒரு லட்சம் ரூபாவும், சென்.றோக் விளையாட்டுக்கழக புனரமைப்பிற்கென ரூபா 4 லட்சம் ஒதுக்கி, அதில் 2 லட்சம் ரூபாவை உடனடியாகத் தந்துதவியமைக்காக,



ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமும்
முன்னாள் அமைச்சருமான
**K.N.டக்ளஸ் தேவானந்தா**
அவர்களையும் -

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்
**திரு. K.V.குகேந்திரன் (ஜெகன்)** அவர்களையும் -

யாழ்ப்பாண கட்சி அமைப்பாளர்
**திரு ரி.றீகன் (றூபன்)** அவர்களையும் -

தோழர் **கேதீஸ** அவர்களையும் -

முன்னாள் மாநகர சபை உறுப்பினரான
**திரு.எட்வேட (பப்பா)** அவர்களையும் -

*நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.*

யா/குருநகர் ஆரோக்கியநாதர் ஆலயமும்,
யா/சென்.றோக் சனசமூக நிலையமும்,
யா/சென்.றோக் விளையாட்டுக் கழகமும்.

(96229)

# கண்ணீர் அஞ்சலி

எமது ஆசிரியர் கிருஷ்ணவேணி மயில்வாகனம்
(சேவைக்கால ஆலோசகர் - சங்கீதம்)
அவர்களின் அன்புத் தாயார்

## திருமதி கனகம்மா மயில்வாகனம்

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

கீதவாஹினி இசைக் கல்லூரி
மாணவர்கள்.

(96225)

# மரண அறிவித்தல்

## கதிரவேலு தவராசா (J.P.)

*(ஓய்வுபெற்ற நீதிமன்ற ஊழியர்)*

கோக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் நீர்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு தவராசா (J.P.) அவர்கள் 20.12.2001 வியாழக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு - செல்லாச்சி தம்பதியினரின் அன்பு மகனும், தவமணியின் அன்புக் கணவரும், தவமதிலி, தவப்பிரியா, திலீபன் ஆகியோரின் அன்புத் தந்தையும், கந்தையா, தவரத்தினம், பரமேஸ்வரி, செல்வரத்தினம், பாக்கியரத்தினம், சீதாதேவி ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (24.12.2001) திங்கட்கிழமை கொழும்பில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கு.சிவனேஸ்வரன் (சிவா)
(மருமகன்).

*சிறுப்பிட்டி மேற்கு.* (96235)

# கல்விச்சாலைக் காட்சிகள்



அண்மையில் குருநகர் பாலமடம் பாலர் பாடசாலையில் நடைபெற்ற, ஒளி விழா நிகழ்வில் யாழ்.ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் அடிகளார் பாலர் பாடசாலைச் சிறார்களுக்கு பரிசுப் பொருள் வழங்குவதைப் படத்தில் காணலாம். (ஐ-15)



தென்புலோலி பெரிய தேவனத்தாய் சனசமூக நிலையத்தின் கீழ் இயங்கும் புலோலி கல்வி மன்ற முன்பள்ளியின் விளையாட்டுப்போட்டி அண்மையில் நடைபெற்றது.

இளைப்பாறிய அதிபர் சி.தர்மலிங்கம் பரிசு பெற்ற மாணவன் ஒருவனுக்கு பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம். அருகில் கல்வி மன்ற இயக்குநர் எஸ்.சிவலிங்கம் காணப்படுகின்றார். (க-7-173)



பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது.

இந்த விழாவில் ஜப்பான் பல்கலைக்கழக வருகை நேர விரிவுரையாளர் திருமதி மனோன்மணி சண்முகதாஸ் பிரதம விருந்தினராக் கலந்துகொண்டு மருத்துவ பீடத்துக்குத் தெரிவான சிவகலா சிவசுப்பிரமணியத்துக்கு அமரர் திருமதி இந்திராணி பாஸ்கரன் ஞாபகார்த்த புலமைப் பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம். (க-7-173)



யாழ்.ஈச்சமோட்டை சாம்றொக் கல்வி நிறுவனத்தின் வாணி விழாவும், கலை விழாவும் அண்மையில் நடைபெற்றன.

இந்த நிகழ்வுகளில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.போதனா வைத்தியசாலையின் நிர்வாக உத்தியோகத்தர் ஆர்.பத்மநாதன் மங்கள விளக்கேற்றி நிகழ்வுகளை ஆரம்பித்து வைப்பதைப் படத்தில் காணலாம். அருகில் நிறுவன இயக்குநர் பீற்றர் சண் விஜசிங்கம், ஆசிரியர்களான அ.காந்தரூபன், எஸ்.சிவகுமார் மற்றும் மாணவர்கள் காணப்படுகின்றனர். (க-7)

நாவலர் விழாவில் பேராசிரியர் குமாரவடிவேல் பேச்சு:

# இந்து சமயத்தின் கௌரவத்தை காப்பாற்றுவது இளைஞர்களின் முக்கியமான கடமையாகும்

## வீடு வீடாகப் பிரசாரம் செய்து விழிப்புணர்வை ஏற்படுத்தலாம்

சுன்னாகம்,டிசெ.24

இந்துசமயத்தின் கௌரவத்தையும், பண்பாட்டையும் காப்பாற்றுவது இந்து இளைஞர்களின் முக்கிய கடமை.

- இவ்வாறு தெரிவித்தார் யாழ். பல்கலைக்கழ விஞ்ஞான பீடாதிபதி, "இந்து சாதனம்" பத்திரிகையின் ஆசிரியருமான பேராசிரியர் இ.குமாரவடிவேல்.

உடுவில் இந்து இளைஞர் மன்றம் ஏற்பாடு செய்த நாவலர் விழா அண்மையில் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெற்றது. இந்த விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றியபோதே பேராசிரியர் இ.குமாரவடிவேல் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தமது உரையில் மேலும் கூறியதாவது:-

நாவலர் அரசியல், பொருளாதாரத்தில், சமூக முன்னேற்றத்தில், தமிழ்மொழி மற்றும் இந்துமத வளர்ச்சியில் சேவையாற்றிய ஒருவர். அவர் ஒவ்வொரு மணித் துளியையும் பிரயோசனப்படுத்தி, தமிழ் மொழியையும் இந்து மதத்தையும் காப்பாற்றினார்.

எமது சயம் அன்று கோயில்கள், கோயில் நிர்வாகம், குருமார்களை அடிப்படையாகக்கொண்டிருந்தது. எமது மக்களிடம் சமய அறிவின்மை இருந்தது. கோயில் நிர்வாகத்தினரும், குருமாரும் ஊழல்மிக்கவர்களாக, குறைபாட்டுடன் நடந்து கொண்டனர். கோயில்களில் பரத்தையர் நடனங்கள், சிற்றின்பப் பாடல்கள், உயிர்ப் பலி போன்றன இடம்பெற்றன.

எமது நாடு அடிமைப்பட்டபின் வந்த மிஷனரிமார் இவற்றைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தினர். பசியையும், கல்வியையும் ஆயுதமாகப் பயன்படுத்தி, மக்களை மதம் மாற்றினர்.

இந்தநிலையில் நாவலர், பேர்சிவல் பாதிரியாரிடம் கல்விகற்கச் சென்றார். மிஷனரிமார் என்ன யுக்தியைக் கையாண்டு மக்களை மதம் மாற்றினார்களோ, அதேவிதமாக அவர்களது நோக்கங்கள், அணுகுமுறைகளை அறிந்து அதே வழிகளைக் கையாண்டு எமது சமயத்தைத் தனிமனிதனாக நின்று காப்பாற்றினார்.

அவர் பிழையானவற்றை எதிர்த்தார். நமது சமயத்தைச் சீர்திருத்தும் சீர்திருத்தவாதியாக விளங்கினார்.

இன்றுள்ள சூழலிலும் பல்வேறு வகைகளில் மத மாற்றங்கள் நிகழ்த்தப்படுகின்றன. எமது பண்பாட்டுக்குள் ஊடுருவி சமயம் சார்ந்த பண்புகளைத் தம்வசப்படுத்துகிறார்கள். சைவ சமயக் கருத்தரங்குகளை அன்னியப்படுத்தி, பிற மதக் கருத்துக்களைத் தூவுகிறார்கள். வியாதிகளையும், பசியையும் நீக்குவதாகப் பிரசாரம் செய்கிறனர். உணவு, உடுபுடைவை, வீடு எனப் பொருள்களைக் காட்டி வசீகரிக்கின்றனர்.

இவற்றில் சைவர்கள் - குறிப்பாக இளைஞர்கள் கவனமாக இருக்க வேண்டும். எமது சமயத்தின் கௌரவத்தையும், பண்பாட்டையும் காப்பாற்றி, எதிர்காலத்தில் திடமான பக்குவமான நிலையை உருவாக்க வேண்டும். வீடுவீடாகப் பிரசாரம் செய்வதன்மூலம் சமய அறிவூட்டல், சமய விழிப்புணர்வூட்டல், சமூக சேவை செய்தல் போன்றன மூலம் இந்து இளைஞர் மன்றங்கள் பங்காற்ற வேண்டும். இதுவே நாவலருக்குச் செய்யும் நன்றிக்கடனாகும்.

- இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு உரையாற்றிய ஆறு.திருமுருகன் தனது உரையில், நாவலர் பெருமான் எமது சமூகம், சமயம் வாழவேண்டும் என்பதற்காக எத்தனையோ இடையூறுகள், துன்பங்கள், அவமானங்களுக்கு மத்தியில் பணியாற்றி, நமது மொழியையும், மத்தையும் காப்பாற்றினார். அவர் கஷ்டப்பட்டு உருவாக்கிய சமயத்தையும், பண்பாட்டையும் காப்பாற்ற எமது மக்கள் முன்வரவேண்டும். ஒவ்வொரு வீடும் கோயில்போல விளங்க வேண்டும். வீட்டின் ஒவ்வொரு உறுப்பினரும் நமது பண்பாட்டைக் கட்டிக் காப்பவர்களாக விளங்க வேண்டும்.

கோயில், துன்பப்படுகிறவரும் இன்பப்படுகிறவரும் சந்திக்கும் இடம். வழிபடச் செல்லும்போது தூய்மையாகச் செல்லவேண்டுமேயன்றி, நகைகளால் அலங்கரித்துச் செல்வதல்ல. கோயிலுக்குக் கால்களே இல்லாத பிள்ளைகளைச் சுமந்து வரும் நேரத்தில் காலுக்குத் தங்கக் காற்சங்கிலி போட்டுப் பிள்ளைகளை அழைத்து வருவோரும் உள்ளனர். இது துன்பப்படுபவர்களை மேலும் துன்பப்படுத்துவதாக அமைந்துவிடும்.

### சேலையோடு சென்று படிக்க வேண்டும்

இராமநாத வள்ளலின் பல்கலைக் கழகத்தில் எமது கலாசாரப் பக்குவம் பேணப்பட வேண்டும். எமது நடையுடை பாவனைகள் காப்பாற்றப்படவேண்டும். முஸ்லிம் பெண் பிள்ளைகள் தமக்குரிய பண்பாட்டைப் பேணுகின்றனர். கொழும்பு, பேராதனைப் பல்கலைக்கழகங்களில் சேலை கட்டி மாணவிகள் செல்வதைக் கண்டிருக்கிறேன். இந்து நாகரிகத்தைச் சிறப்புப் பாடமாகக் கற்கும் முந்நூறு மாணவிகளாவது பல்கலைக்கழகத்தில் சேலையோடு சென்று படிக்க வேண்டும். - என்றார்.

யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் திருமதி கலைவாணி இராமநாதனும் சிறப்புரையாற்றினார்.

முன்னதாக, மருதனார்மடம், பல்லப்ப வைரவர் ஆலயத்திலிருந்து நாவலரின் திருவுருவப்படம் விழா மண்டபத்திற்கு ஊர்வலமாக எடுத்து வரப்பட்டது. (க-7-27)

# வீடுகள் அமைத்துத்தரக் கோரிக்கை

வலிகாமம் கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ள சிறுப்பிட்டி தெற்குப் பகுதியில் உள்ள குடும்பங்கள் தமக்குரிய காணிகளில் வீடுகளை அமைத்துத்தரும்படி அப்பகுதி பொது அமைப்புக்களின் ஊடாக ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்திடம் கோரிக்கை விடுத்துள்ளன.

சிறுப்பிட்டி தெற்கு கலை ஒளி சனசமூக நிலையத்தின் பிரதேசப் பகுதியில் வசிக்கும் 150 வறிய குடும்பங்களே இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளன.

ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம் வசதி குறைந்த சொந்தக் காணியுடையவர்களுக்கு புதிய வீடுகளை அமைத்துக் கொடுத்துவருவது குறிப்பிடத்தக்கது. (க-180)

# கலாசார உத்தியோகத்தர்களுக்கு ஜனவரி முதல் 500 ரூபா கொடுப்பனவு

யாழ்ப்பாணம்,டிசெ.24

யாழ்.மாவட்டத்தில் கடமையாற்றும் கலாசார உத்தியோகத்தர்களின் செயற்றிறனை வளர்க்கும் வகையில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் ஒவ்வொரு கலாசார உத்தியோகத்தர்களுக்கும் ஜனவரி முதல் மாதாந்தம் 500 ரூபாவை வழங்கவுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் உள்ள அறநெறிப் பாடசாலைகளைக் கண்காணித்தல் மற்றும் அவற்றின் தேவைகளை நிறைவேற்றுதல் ஆகிய பணிகளை மேற்கொள்ளுவதற்காக இந்த ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை -

கடந்த மாதம் 18ஆம் திகதி யாழ்.நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் நடத்தப்பட்ட மூத்த கலைஞர் கௌரவிபபை சிறப்புற நடத்தியமைக்காக யாழ்.மாவட்ட கலாசார உத்தியோகத்தர்களுக்கு 500 ரூபா ஊக்குவிப்புக் கொடுப்பனவாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் சாந்தி நாவுக்கரசன் இந்தக் கொடுப்பனவை அனுப்பி வைத்துள்ளார். (க-7)

# சமூகப்பணி தொடர்பான டிப்ளோமா கற்கை நெறி

யாழ்ப்பாணம்,டிசெ.24

தேசிய சமூக அபிவிருத்தி நிறுவகம், சமூகப் பணி தொடர்பான ஈராண்டு டிப்ளோமாக் கற்கை நெறிக்கு விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

தமிழ், சிங்களம் ஆகிய இரண்டு மொழிகளிலும் நடத்தப்படவுள்ள இந்தக் கற்கை நெறிக்கு 20 வயதுக்கும் 46 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் விண்ணப்பிக்கமுடியும்.

இரண்டு வருடங்கள் முழு நேரப் பாட நெறியாக இது அமையும் என்றும் -

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் சித்திபெற்று பல்கலைக்கழகங்களுக்கு விண்ணப்பிப்பதற்கான அடிப்படைத் தகைமைகளைப் பெற்றவர்களும் மற்றும் உயர் கல்வித் தகைமை உடையவர்களும் இந்தப் பாட நெறிக்கு விண்ணப்பிக்கமுடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி விண்ணப்பம் தொடர்பான விவரங்கள் டிசெம்பர் மாதம் 21ஆம் திகதிய வர்த்தமானியில் பிரசுரமாகியுள்ளன. வர்த்தமானியின் பிரதியை யாழ்.கஸ்தூரியார் வீதியில் உள்ள அருண்ஸ் ஸ்போட்ஸ் ஸ்பொட்டில் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம். (க-7)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,டிசெ.24

யாழ்.மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின் நிர்வாக சபை உறுப்பினர்களுக்கான அவசர கலந்துரையாடல் ஒன்று நாளை செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு சங்க அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் ஜனவரி மாதம் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ள நேர்முகப் பரீட்சை தொடர்பாக ஆராய வேண்டியுள்ளதால் அனைத்து நிர்வாக சபை உறுப்பினர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு சங்கத்தின தலைவர் அறிவித்துள்ளார். (க-6)

## இசை நிகழ்ச்சி

யாழ்ப்பாணம்,டிசெ.24

யாழ்.பல்கலைக்கழக முல்லை மாவட்ட மாணவர் ஒன்றியம் தமது பிரதேசத்தில் உள்ள வறிய மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு நிதி சேகரிக்கும் முகமாக நாளை செவ்வாய்க்கிழமை இசை நிகழ்ச்சி ஒன்றை நடத்தவுள்ளது.

பல்கலைக்கழக அனைத்துப்பீட மாணவர்களும் இணைந்து 'லொயலாஸ்' கல்யாண மண்டபத்தில் நடைபெறவுள்ள இந்த இசை நிகழ்ச்சி மூலம் சேகரிக்கப்படும் நிதி-

பொருளாதாரத் தடைகள் மற்றும் யுத்த அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டுத் தமது கல்வியைத் தொடர நிதிவசதி இன்றிப் பரிதவிக்கும் மாணவர்களுக்கு வழங்குவதற்கு இந்த நிதி பயன்படுத்தப்படும் என்று முல்லை மாவட்ட மாணவர் ஒன்றிய பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.(க-6)

## 50 சிறுவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள்

யாழ்ப்பாணம்,டிசெ.24

சுகவாழ்வு நிலையம் தந்தையரை இழந்த குடும்பங்களைச் சேர்ந்த 50 சிறுவர்களுக்கு பாடசாலை உபகரணங்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

இந்த உபகரணங்களை வழங்கும் நிகழ்வு கடந்த 18ஆம் திகதி சுகவாழ்வு நிலையத்தில் நடைபெற்றது.

சுகவாழ்வு நிலையத் தலைவர் வண.பிதா ஞ.டேமியன் அடிகளார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் விருந்தினர்களாக வடமாகாண குழு முதல்வர் அருட்தந்தை ஜீவேந்திரா போல், அருட்சகோதரி ஒஸ்ரின் ஆகியோர் கலந்து கொண்டனர். (க-4)

# வாசகர் திருமுகம்

## அதிகாரிகளின் அசமந்தப்போக்கும் கர்ப்பிணித் தாய்மாரின் சிரமமும்

கடந்த 12.12.2001 அன்று வலிகாமம் பகுதியில் - (புத்தூர் கிழக்கில்) குழந்தைகளுக்கான திரிபோஷா மா வழங்குவதாகவும், தடுப்பூசி போடுவதாகவும் அறிந்த பெற்றோர், தமது கைக்குழந்தைகளுடன் காலை ஆறு மணிக்கே அங்கு சென்றனர்.

பின்னர் அங்கு பணியாற்றும் தொண்டர்கள் 'நம்பர்' வழங்கினார்கள். அதிலும் பாகுபாடு காட்டப்பட்டது. தங்கள் உறவினர்களுக்கு முன்னுரிமையாக 'நம்பர்' வழங்கப்பட்டது. குறிப்பாக பிந்தி வந்தவர்களும் தொண்டர்களின் செல்வாக்கைப் பெற்று 'நம்பரைப்' பெற்றனர். இப்படியான தொண்டர்களும் இங்கே தேவைதானா?

காலை பதினொரு மணியளவில் குழந்தைகளுக்கான தடுப்பூசி போடப்பட்டு, பிள்ளைகளின் நிறையும் பரிசோதிக்கப்பட்டு மா வழங்கப்படும் என்று சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தெரிவித்தனர். கொளுத்தும் வெயிலையும் பொருட்படுத்தாது தமது குழந்தைகளுடன் தாய்மார் காத்திருந்தனர்.

ஆனால் பி.ப. 2மணியளவில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் 75பேருக்கு மட்டும் மா வழங்கப்படும் என்றும், 75 வரையான 'நம்பர்' பெற்றவர்கள் மட்டும் நிற்கவும் என்றும் குறிப்பிட்டார்கள். கொளுத்தும் வெயிலில் காத்திருந்த மக்களில் சுமார் 100 வரையிலான தாய்மார் ஏமாற்றத்துடன் வீடு திரும்பினர்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகளும், தொண்டர்களும் குழந்தைகளுக்கு வழங்கப்படும் திரிபோஷா மாவை சூறையாடுவதாக மக்கள் பெருங் கவலையுடன் கூறிச்சென்றனர். குறித்த அதிகாரிகள் 75 பேருக்கு மட்டும்தான் மா வழங்கப்படும் என்று கூறி, நேரத்துக்கு தாய்மாரை அனுப்பி வைத்திருக்கலாம்தானே? அதிகாரிகள் சரியான முறையில் செயற்பட்டிருந்தால் ஒரு குழந்தைக்கு 2பைக்கற் வீதம் வழங்கப்பட்ட மாவை எல்லோருக்கும் ஒரு பைக்கற் வீதம் வழங்கியிருக்கலாம்தானே?

இவ்வாறு பொறுப்பற்ற அதிகாரிகளின் செயற்பாடு பல குழந்தைகளின் போஷாக்குக் குறைபாட்டுக்குக் காரணமாகும். இப்படிப்பட்ட அதிகாரிகள் தேவைதானா? இவற்றுக்கெல்லாம் இந்த அதிகாரிகள் என்ன பதில் கூறப்போகிறார்களோ தெரியவில்லை...

*புத்தூர்.* **ஏமாற்றப்பட்ட பெற்றோர்.**

## சமாதான நீதவான் நியமனங்கள்; மீள்பரிசீலனை செய்வது அவசியம்

இலங்கை அரசியலில் கடந்த 7 வருடகால ஆட்சியின்போது முன் எப்பொழுதும்மில்லாதவாறு நாடுமுழுவதிலும் பல்லாயிரக்கணக்கானோருக்குச் சமாதான நீதவான் நியமனங்கள் வழங்கப்பட்டன.

யாழ்.மாவட்டத்திலோ ஒரே கிராமத்தில் மட்டும் தமக்கு வேண்டிய பலருக்கு இவ்வாறான நியமனங்கள் தாராளமாக வழங்கப்பட்டன.

சமாதான நீதவான் பதவி மிகவும் மதிப்புவாய்ந்ததொன்றாகும்.

மலேசியாவில் சமாதான நீதவான் பதவி பெற்றவர் மிக உயர் நிலையில் வைத்து எண்ணப்படுகிறார்.

அவர் அந்தப் பிரதேசத்தின் கௌரவ பிரஜையாகவும், எதனையும் தீர்த்துவைக்கும் ஒருவராகவும், நாணயம், நேர்மை, திறமை, கல்வி அறிவுள்ளவராகவும் கருதப்படுகிறார்.

யாழ்.மாவட்டத்தில் கொடுக்கப்பட்ட சமாதான நீதவான் நியமனங்கள் கட்சிச் செல்வாக்கின் அடிப்படையில் நன்கு செயற்படமுடியாத பலருக்குக் கொடுக்கப்பட்டுள்ளன என்றால் அது மிகையாகாது. இதுபற்றிப் பத்திரிகைகளில் சுட்டிக்காட்டப்பட்டதுமுண்டு.

வெறும் பதவி முத்திரையை வைத்துக்கொண்டு செயற்படாதவர்களும் பலர் உள்ளனர். இன்னொரு பகுதியினர் அரச ஊழியர்கள். இவர்கள் பகலில் தமது உத்தியோகக் கடமைக்குச் சென்று, பின்னர் மாலையே வீடு திரும்புவர். இவர்களால் பொதுமக்களுக்கு எவ்வாறு சேவை செய்ய முடியும்?

1977ஆம் ஆண்டு பதவிக்கு வந்த ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆதரவாளர்களுக்கு அள்ளிக்கொடுத்த சமாதான நீதவான் பதவிகளை நீக்கியமை பலருக்கு ஞாபகமிருக்கலாம். கண்டபடி சமாதான நீதவான் நியமனங்கள் கொடுக்கப்பட்டதை மறுபரிசீலனை செய்து, தக்கோருக்கு அப்பதவியை வழங்கக் கடந்த அரசாங்கம் 2001ஆம் ஆண்டு மாசி மாதம் 18ஆம் திகதி பத்திரிகைகளில் விளம்பரம் செய்து 15 கேள்விகளை வெளியிட்டிருந்தது.

இந்தக் கால எல்லைக்குள் கிடைக்காத விண்ணப்பங்கள் ரத்துச் செய்யப்படுமெனவும் அந்த அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால் அதன்பின்னர் எதுவும் நடந்ததாகத் தெரியவில்லை. சமீப காலத்தில் வழங்கப்பட்ட மாவட்ட, அகில இலங்கை சமாதான நீதவான் பதவிகள் மறுபரிசீலனை செய்யப்பட்டு தகுதியுள்ளோருக்கு நியமனம் கிடைக்க அனைத்துத் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் புதிய அரசும் முன்வரவேண்டுமென விநயமாக வேண்டிக்கொள்கின்றேன்.

*ஆனைக்கோட்டை.* **ந.சிவபாதம்.**

## வழிப்படுத்தவேண்டியவர்களே இப்படி நடந்தால்...?

கொற்றாவத்தையின் சில பகுதிகளில் கசிப்பு உற்பத்தியும், விற்பனையும் மீண்டும் அதிகரித்துள்ளன.

மேற்படி பகுதிகளில் நிரந்தரமாக வசிப்பவர்கள் மட்டுமன்றி, இடம் பெயர்ந்து வசிப்பவர்களும் போட்டி போட்டுக்கொண்டு கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டு வருகின்றனர்.

கசிப்பு விற்பனை காரணமாக சம்பந்தப்பட்ட பகுதிகளில் நாள்தோறும் பல்வேறு சமூகச்சீர்கேடுகளும் நிகழ்ந்த வண்ணம் உள்ளன.

எனினும் இந்தச் சமூகச்சீர்கேடு குறித்து கிளர்ந்தெழுந்த இளைஞர் குழுவொன்று கசிப்பு உற்பத்தியையும், விற்பனையையும் தடுத்து நிறுத்த ஆர்வத்துடன் செயற்பட்டது.

ஆனால் இந்தப் பகுதியில் உள்ள சனசமூக நிலையத்தின் நிர்வாகிகள் கசிப்பு உற்பத்தியைத் தாம் தலையிட்டு நிறுத்துவதாகத் தெரிவித்து இளைஞர்களின் முயற்சிக்கு ஆப்பு வைத்துவிட்டனர்.

வளர்ந்துவரும் இளைய சமூகத்தினரை ஆக்கபூர்வமான செயற்றிட்டங்களில் ஈடுபடுமாறு வழிப்படுத்துவது சமூகத்தின் மூத்த பிரஜைகளின் கடமை.

ஆனால் சமூகத்தின் சீர்கேடுகளை எடுத்துக்காட்டி, அதனை நெறிப்படுத்த முனைந்த இப்பகுதி இளைஞர்கள் இந்தப் பகுதியில் வசிக்கும் மூத்தோர்களால் - குறிப்பாக சனசமூக நிலையத்தின் நிர்வாகிகளால் - வேண்டுமென்றே ஒதுக்கப்பட்டுள்ளனர்.

இந்தநிலை முடிவுக்குக் கொண்டுவரப்படும்போதே கசிப்பு உற்பத்திக்கும், விற்பனைக்கும் முற்றுப்புள்ளி வைக்கமுடியும். இதனை சம்பந்தப்பட்டவர்கள் கவனத்தில் எடுத்துச் செயற்படவேண்டும்.

*கொற்றாவத்தை.* **கொற்றை மண்பற்றாளன்.**

# ஓராண்டு நினைவஞ்சலி



பிறப்பு 02 - 04 - 1926

இறப்பு 03 - 01 - 2001

## அமரர் கந்தையா சபாரட்ணம்

திதி: 24.12.2001 மார்கழி வளர்பிறை அட்டமி


*காலங்கள் நகர்ந்து இன்று*
*ஓராண்டு சென்றாலும்*
*உங்கள் நினைவுகளை நாம் மறப்பதில்லை!*
*கண்ணை இமை காப்பது போல்*
*எம்மைக் காத்து*
*அன்பு காட்டி ஆதரித்தீர்!*
*உங்கள் அன்பு நெஞ்சம் மறப்போமா?*

அன்னாரின் ஓராண்டு நினைவையொட்டி இன்று (24.12.2001) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிரியை களிலும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் எமது உற்றார், உறவினர், நண்பர் கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*இல.3/6, சைவப் பாடசாலை வீதி,* - அமரரின் குடும்பத்தினர்.
*திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.*

(96227)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம் 04 - 03 - 1923

மறைவு 24 - 11 - 2001

திருமதி

## சின்னத்தங்கம் வைரமுத்து

"உறங்குவது போலும் சாக்கா டுறங்கி விழிப்பது போலும் பிறப்பு"

இன்று (24-12-2001) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் எமது அன்புத் தாயாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும்படி உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

*சிவன் வீதி, உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.*

*வ.சிவகணேசதாசன், உரிமையாளர், சர்மிளா டிரேடர்ஸ், உரும்பிராய்.*

(96232)

# மரண அறிவித்தல்

## சின்னப்பா கந்தையா

சுன்னாகம் தெற்கைச் சேர்ந்த சின்னப்பா கந்தையா அவர்கள் 18.12.2001 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா நல்லபிள்ளையின் அன்புக் கணவரும், சிவனேஸ்வரி, யோகேஸ்வரி (ஹொலண்ட்), சிவப்பிரகாசம் (கனடா), தியாகலிங்கம் (தலைவர், சுன்னாகம் தெற்கு விவசாய சம்மேளனம்), மகேந்திரலிங்கம் (கனடா), திருமணி ஆகியோரின் அன்புத் தந்தையும் செல்வராசா (ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், மதுவரித் திணைக்களம்), செல்வநாயகம் (ஓய்வுபெற்ற பொலீஸ் உத்தியோகத்தர் - ஹொலண்ட்), திலகவதி (கனடா), செல்வராணி, ஜெயமலர் (கனடா), சுந்தரராசன் (சிமெந்துக் கூட்டுத்தாபன உத்தியோகத்தர்) ஆகியோரின் அன்பு மாமனாரும், நவகீதா, சிறீதரன் (பிரான்ஸ்), திலீபன் (லண்டன்), தீபகீதா (கொழும்பு), இன்பகீதா, தினேஸ்குமார் (ஹொலண்ட்), பத்மரூபா (ஹொலண்ட்), பத்மராஜி (ஹொலண்ட்), கிருஷ்ணரூபா (ஹொலண்ட்), விஷ்ணுராஜ் (ஹொலண்ட்), ஆதவன் (கனடா), ஆதித்தன் (கனடா), ஆரணி (கனடா), தாரணன், தாருயன், சோபிதா, மதீபன் (கனடா), மகீசன் (கனடா), ஜேஸ்ரராஜன் ஆகியோரின் அன்புப் பேரனும் அனோஜனின் (பிரான்ஸ்) அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (24.12.2001) திங்கட்கிழமை நடைபெற்றுப் பூதவுடல் நண்பகல் 12 மணியளவில் சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பழைய பொலீஸ் நிலைய வீதி, சுன்னாகம் தெற்கு, சுன்னாகம்.*

தகவல்: க.தியாகலிங்கம் (மகன்)

(96230)

## சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம்,டிசெ.24

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் 'முயற்சி' திறன்விருத்திப் பயிற்சிப் பட்டறையில் பங்குபற்றி பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 28ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம் 4ஆம் குறுக்குத் தெருவில் அமைந்திருக்கும் அகதிகள் புனர்வாழ்வு நிறுவன அலுவலகத்தில் நடைபெறவிருக்கும் இந்த நிகழ்வில் விருந்தினர்களாக யு.என்.எச்.சி.ஆர். மற்றும் சிறுவர் பாதுகாப்பு நிதியம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் கலந்துகொள்கின்றனர். (க-4)

## வெளியீட்டுவிழா

தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் மாதாந்த வெளியீடான ஞானச்சுடர் ஆத்மீக சஞ்சிகையின் மார்கழி மாத இதழ் வெளியீட்டுவிழா எதிர்வரும் வெள்ளிக்கிழமை மு.ப. 10.30 மணிக்கு சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் பேரவைத்தலைவர் இ.நாகலிங்கம் தலைமையில் நடைபெறும். இச்சஞ்சிகையின் வெளியீட்டுரையை வசாவிளான் மத்திய கல்லூரி ஆசிரியர் செபரமேஸ்வரனும், மதிப்புரையை நாவலாசிரியரும், எழுத்தாளருமான தெணியானும் நிகழ்த்துவார்கள். (க-173)

## றாகமையில் நடந்த பாசறையில் யாழ்.சிறுவர்கள்!

திருமறைக்கலாமன்றமும் தென் இலங்கை லக்மல் சமாதானச் செய்திட்ட நிறுவனமும் இணைந்து றாகமையில் நடத்திய சிறுவர்களுக்கான பாசறையில் யாழ்ப்பாணத்தில் இருந்து 10 சிறுவர்கள் கலந்துகொண்டனர்.

கடந்த 17ஆம் திகதி தொடக்கம் 19ஆம் திகதிவரை நடைபெற்ற இந்த சிறுவர் பாசறையில், வவுனியா, திருகோணமலை, அப்புத்தளை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த சிறுவர்களும பங்குபற்றினர். (க-6)



## வைத்தியம்

செங்கண்மாரி. அல்சர். ஆஸ்மா.
வாதநோய்கள். வலிப்புநோய்.
பீனிசம். தலையிடி.
தலை, கால் அவியல்.
சரும நோய்கள்.
மாதவிடாய்க்குத்து.
இரத்தப்போக்கு.
வெள்ளைக் கசிவு. கருவழிதல்.
மகப்பேறின்மை.
குழந்தை வைத்தியம்.
வீரியக் குறைவு. மூல வியாதிகள்.
மூத்திரரோகங்களில்
பிரபலமானவர்.
சகல வியாதிகளையும்
குணப்படுத்துபவர்.

வேலணை
வைத்திய கலாநிதி
**ச.இராசரத்தினம்**
*121, 2ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.*
*தொலைபேசி எண்: 2459*

(96198)


# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 28 - 02 - 1927

மறைவு 24 - 12 - 1998

## அமரா நாகமுத்து சின்னத்துரை J.P.

(முன்னாள் உடுவில் கி.ச. உபதலைவர்)

*மூன்றாண்டு சென்றதய்யா*
*மாறவில்லை உம் திருவதனம்!*
*தேடி நித்தம் ஏங்குகின்றோம்*
*காணவில்லை உம் திருவுருவம்!*
*கூடியிருந்து அரவணைத்து - இன்று*
*எம்மை விட்டுச் சென்றதேனோ?*

பிரிவால் துயருறும்:
மகள் :- பவளமலர்
மருமகன்:- பாக்கியநாதன்
பேரப்பிள்ளைகள்:- பிரியா, தீபா, சிந்து, சரண்யா.

*ஞானப்பிரகாசர் வீதி, மல்வம், உடுவில்.*

(96231)

# மூன்றாம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம் 21 - 03 - 1938

மறைவு 27 - 12 - 1998

திருமதி

## நகுலேஸ்வரி கோபாலகிருஷ்ணன்

(லிகிதர், காப்புறுதிக் கூட்டுத்தாபனம்)

*அன்புத்தாயே! பெரியம்மாவே!*
*எம்மைப் பாசமுடன் வளர்த்து*
*பார்புகழ் பேர்புடன் வாழ்ந்து*
*நின் பொற்பணிகளைக் காப்புறுதிக்கு அர்ப்பணித்து*
*இறைவன் அடி சேர்ந்த எம் இதய தெய்வமே!*
*நீங்கள் சென்ற நாளிலிருந்து வேதனைகள் பல...*
*யுத்த வருகையினால் நிலையில்லாப் பறவைகளானோம்!*
*'பிருந்தாவனத்'தில் நீங்கள் வாழ்ந்த அந்த நாளும் வந்திடாதோ!*

உங்கள் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

நிரந்தர முகவரி: *"பிருந்தாவனம்" நுணாவில் சந்தி, சாவகச்சேரி.*

தற்காலிக முகவரி: *"கலாபவனம்" வல்லை வீதி, சங்கானை.*

- கணவர், மகன், சகோதரி, பெறாமக்கள்.

(96200)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும்

## நன்றி நவிலலும் - 25.12.2001



தோற்றம் - 14-09-1967

மறைவு - 25-11-2001

## செல்வி சாதனா சிவலிங்கம்

B.Sc. (Hons) 1st Class

*(இரசாயனவியல் ஆசிரியை, இராமநாதன் கல்லூரி - மருதனார்மடம்)*

*மாயங்கள் நிறைந்த மாநிலத்திலே*
*வேதியல் மாதாவின் மகவாய் அவதரித்து*
*பிறர் கண்ணீர் துடைத்து அக மகிழ்ந்த - நீர்*
*இன்று அந்த அன்னையின் கண்கள்*
*உதிரம் சிந்த எங்கு சென்றீரோ?*

*எமது மகளின் மறைவின் ஆழ்ந்த துயரத்தில் கலந்துகொண்ட இராமநாதன் கல்லூரியைச் சேர்ந்த அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர், பழைய மாணவர் சங்கத்தினர், கல்விசாரா ஊழியர்கள், 2001 கணித, விஞ்ஞானப் பிரிவு மாணவிகள் மற்றும் மாணவ முதல்விகள், இன்றக்ட் கழகத்தினர், பல்கலைக்கழக சகமாணவர்கள் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எங்களது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.*

*அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும், மதியபோசனமும் நாளை (25.12.2001) செவ்வாய்க்கிழமை ஜம்பட்டா கொட்டிகொட்டி லேன்றில் நடைபெறும் என்பதை சகலருக்கும் அறியத்தருகின்றோம்.*

*திருமதி.சி.சிவலிங்கம், 170/1 A, காலி வீதி, தெஹிவளை, கொழும்பு.*
T.P.No.732899.

பிரிவால் துயருறும்: குடும்பத்தினர்.

(96206)

## உதயன்

### அரசியல் தலைமைத்துவத்தின் அதிக சிரத்தை அவசியம்

அரசுத்தரப்பும் விடுதலைப் புலிகள்தரப்பும் தத்தமது பாட்டில் யுத்த நிறுத்தத்தை அறிவித்துவிட்டன. ஆனால் அந்த யுத்த நிறுத்தத்தைச் செயற்படுத்துவதற்கான நடைமுறை ஏற்பாடுகள் குறித்து இதுவரையும் திட்டவட்டமான ஏற்பாடுகள் ஏதும் செய்யப்பட்டதாகத் தெரியவில்லை.

படை அதிகாரிகளுக்குத் தெளிவான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டதாகத் தகவல் இல்லை.

பிரதமர் ரணில் யுத்த நிறுத்தத்தை அறிவித்துவிட்டுத் தன்பாட்டில் - தனது முன்னைய திட்டப்படி - இந்தியப் பயணத்தை மேற்கொண்டு புதுடில்லிக்குப் புறப்பட்டுவிட்டார்.

முப்படைகளின் தளபதியும் நாட்டின் ஜனாதிபதியுமான சந்திரிகா பண்டாரநாயக்காவும், பிரதமர் ரணிலன் யுத்த நிறுத்த அறிவிப்புக்குப் பச்சைக்கொடி காட்டிவிட்டு, கிறிஸ்மஸ் தினத்தைத் தனது பிள்ளைகளுடன் கொண்டாட பிரிட்டனுக்குப் புறப்பட்டுவிட்டார்.

ஆக, நாட்டின் அரசியல் தலைமைத்துவத்தின் சார்பில் பாதுகாப்புத்துறை தொடர்பாக இப்போது பொறுப்பாக நாட்டில் இருப்பவர் பாதுகாப்புத்துறை அமைச்சர் திலக் மாரப்பனதான். அவர் கூட இந்தப் பதவிக்குப் புதியவர். பாதுகாப்புத்துறைக்கே முற்றிலும் புதிய முகம். அத்தோடு முதற்றடவையாக அமைச்சர் பதவியைப் பொறுப்பேற்று இருப்பவர். அதுமட்டுமல்லாமல், பாதுகாப்பு அமைச்சில் முக்கிய பொறுப்பை ஏற்றிருக்கும் அதன் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோவும் இப்பதவிக்கு முற்றிலும் புது ஆள்.

யுத்தநிறுத்தம் போன்ற - எந்தக் கணத்திலும் சர்ச்சைகளைத் தோற்றுவிக்கக்கூடிய - எந்த நேரத்திலும் அவசர அவசரமாக முடிவுகளை எடுக்க நிர்ப்பந்திக்கின்ற - ஒரு விவகாரத்தில் அரசியல் தலைமைத்துவத்தின் வழிகாட்டல் எந்நேரமும் தயாராக இருப்பது அவசியமான - கட்டாயமான - ஒன்றாகும்.

இதில் தவறு - தாமதம் - ஏற்பட்டால் நிலைமை எல்லை மீறி, வாய்ப்பு நிரந்தரமாக இழக்கப்பட்டுவிடும் ஆபத்து உள்ளது என்பதை அனைவரும் ஏற்றுக்கொள்வர்.

இனப்பிரச்சினைக்கு - நீண்டகாலம் நாட்டையே பேரழிவுக்குள் சிக்க வைத்திருக்கும் இந்தப் பிணக்குக்கு - தீர்வுகாண்பதற்காக ஆயத்த நடவடிக்கைகள் கருக்கட்டியிருக்கும் நல்ல வேளை இது.

அதன் ஆரம்பமாக இந்த இருதரப்பு யுத்தநிறுத்தம் என்ற நல்லதொரு தொடக்கம் செயற்பாட்டுக்கு வந்துள்ளது.

இந்த யுத்தநிறுத்தத்தை நல்ல முறையில் பேணி, அதனை முறிய விடாமற் கொண்டுசெல்வதில்தான் சமாதான முயற்சிகளின் முழு வெற்றியும் தங்கியிருக்கின்றது என்பது அனைவருக்கும் புரிந்த விடயம்.

எனவே, யுத்தநிறுத்தம் அறிவித்தால் மட்டும் போதாது. அதனைப் பேணுவதற்கான வழிமுறைகள், வழிகாட்டல்கள் திட்டவட்டமாக வழங்கப்பட வேண்டும். இந்த வழிமுறைகள், வழிகாட்டல்கள் ஒருதலைப்பட்சமாகத் தீர்மானிக்கக் கூடியவை அல்ல. அரசுத்தரப்பும் (படைத்தரப்பும்) புலிகள் தரப்பும் தங்களுக்குள் இணக்கமாக நடைமுறை ஏற்பாடுகளை (Modalities) வகுத்துக்கொள்ள வேண்டும்.

அதைச் செய்யத் தவறினால் எங்கோ களத்தில் ஒரு மூலையில் இருக்கும் ஒரு சிப்பாயின் அல்லது போராளியின் - சரியான வழிநடத்தல் இல்லாத செயற்பாடு - முழு முயற்சியையும் ஒரு கணத்தில் 'கோவிந்தா' ஆக்கிவிடும்.

இதுதவிர, நாட்டில் பல கட்சிகள், குழுக்கள் ஆயுதங்களைத் தாங்கிய வண்ணம் உள்ளன. அவற்றில் பலவற்றுக்கு இந்த அமைதித் தீர்வுக்கான முயற்சியிலும், அதற்கு அத்திவாரமான இருதரப்பு யுத்தநிறுத்தத்திலும் எள்ளளவும் விருப்பமில்லை என்பது ஊரறிந்த இரகசியம்.

எனவே, இருதரப்பு யுத்தநிறுத்தத்தை நடைமுறைப்படுத்துவது குறித்து இருதரப்புக்குமிடையில் தெளிவான - திட்டவட்டமான - வழிகாட்டுதல்கள், நடைமுறைகள் இல்லாததைப் பயன்படுத்தி இந்தக் குழுக்கள், கட்சிகள் கூட, யுத்தநிறுத்தத்தைக் குலைக்கும் வகையில் தமது கைவரிசையைக் காட்டிவிடக்கூடும்.

அல்லது அரசியல் தலைமைத்துவத்தின் சரியான வழிகாட்டுதல்கள் இல்லாததைப் பயன்படுத்தி சில இராணுவ சக்திகள்கூட 'எண்ணை திரண்டு வரும் வேளை தாழியை உடைக்கும்' பணியைச் செய்துவிடலாம்.

எனவே, அரசியல் தலைமைத்துவம் இதில் அதிக சிரத்தை காட்டுவது அவசியமாகும்.

---

பாடசாலையை விட்டு விலகிய

# யுவதிகளுக்கு 6 மாத கால தும்புத் தொழில் பயிற்சிநெறி

யாழ்ப்பாணம்,டிசெ.24

வடக்கு - கிழக்கு மாகாண தொழில்துறைத் திணைக்களம், பாடசாலையை விட்டு விலகிய பெண் பிள்ளைகளுக்கு 6மாதகால தும்புத் தொழில் பயிற்சியை வழங்க நடவடிக்கை எடுத்துவருகிறது.

வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வழங்கப்படவுள்ள இந்தப் பயிற்சி நெறிக்கு ஆர்வமுள்ள யுவதிகள் விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பதாரிகள் சுயவிவரம் அடங்கிய விண்ணப்பங்களை எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் தமது பகுதி கிராம அலுவலரிடம் அல்லது வலி.தெற்கு பிரதேச செயலகத்தில் ஒப்படைத்து, தமது பெயர்களைப் பதிவுசெய்து கொள்ளுமாறும் -

எதிர்வரும் ஜனவரிமாதம் ஆரம்பமாகும் இந்தப் பயிற்சி நெறியில் பங்குபற்றுவோருக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளும் வழங்கப்படவுள்ளதாகவும் -

தொழில் துறைத்திணைக் கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(க-6-29)

## விடைத்தாள் மதிப்பீட்டுப் பணி

அச்சுவேலி,டிசெ.24

ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை விடைத்தாள்கள் மதிப்பீடு செய்யும் பணிகள் ஜனவரி மாதம் 11ஆம் திகதி தொடக்கம் 23ஆம் திகதி நடைபெறும்.

யாழ்.மாவட்டத்தில் விடைத் தாள்கள் திருத்தும் பணிகள் வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

விடைத்தாள்கள் மதிப்பீடுசெய்யும் பணியில் ஈடுபடவுள்ள பிரதிப் பரீட்சகர்கள், உதவிப் பரீட்சகர்களுககான நியமனக் கடிதங்களை இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் அனுப்பி வைத்துள்ளது. (க-11)

## திருநெல்வேலியில் தென்னம் நாற்று

குருநகர்,டிசெ.24

திருநெல்வேலியில் அமைந்துள்ள விசாய ஆராய்ச்சி நிலையத்தில் தென்னம் நாற்றுகள் தற்போது விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

ஐந்து வருடங்களில் காய்க்கும் நாற்று ஒன்று 40 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகிறது. (க-51)

## நாட்டு நடப்பு

### மண்ணினை மீட்டு மாநிலம் காண்போம்

மாண்புறு இமய மாமலைபோல
மக்கள் செய்தனர் யாகம்
எண்ணிலும் பெரிய ஏழ்கடலிலும் பெரிதே
இளைஞர்கள் ஈந்த நல் உயிர்கள்
கண்ணிலும் அரிய நற்சுதந்திரம் வேண்டி
களத்தினில் ஈந்தனர் தம்முயிரை
பொன்னிகர் சுடராம் இவர் தமக்கு
பூதலமே தரினும் போதாதன்றோ
எண்ணெயும், கிழங்கும், இனிய நல் உணவும்
ஈடில்லை எம்மவர் தியாகத்துக்கு
மண்ணினை மீட்டு மாநிலம் காணும்
மற்றவை பின் பெறலாமே!

*- விகடகவி.*

# பட்டதாரி பயிலுநர் ஆசிரியர்களாக ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு

## குடாநாட்டில் ஜனவரியில் நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம்,டிசெ.24

யாழ்மாவட்டத்தில் உள்ள வேலையற்ற பட்டதாரிகளில் இருந்து பட்டதாரி பயிலுநர் ஆசிரியர்களாக ஆயிரம் பேரை இணைத்துக்கொள்வதற்கான நேர்முகப் பரீட்சைகள் எதிர்வரும் ஜன்வரி மாதம் நடைபெறவுள்ளதாக மாகாணக் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

எதிர்வரும் ஜனவரி மாதம் 7ஆம், 8ஆம், 9ஆம் திகதிகளில் இந்த நேர்முகப் பரீட்சை மூன்று இடங்களில் காலை 9 மணி தொடக்கம் நடைபெறவுள்ளதாகவும் மாகாணக் கல்வி அமைச்சின் அதிகாரி ஒருவர் யாழ். மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்திற்கு அறிவித்துள்ளார்.

தீவகம் மற்றும் யாழ்ப்பாண கல்வி வலய பட்டதாரிப் பயிலுநர் ஆசிரியர்களுக்கான நேர்முகப் பரீட்சைகள் யாழ்.கல்வி வலய அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

வடமராட்சி மற்றும் தென்மராட்சி கல்வி வலய பட்டதாரிகளுக்கு வடமராட்சி கல்வி வலய அலுவலகத்திலும், வலிகாமம் கல்வி வலயப் பட்டதாரிகளுக்கு வலிகாமம் கல்வி வலய அலுவலகத்திலும் இந்த நேர்முகப் பரீட்சைகளை நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை -

இந்த நேர்முகப் பரீட்சைகளை நடத்துவதற்காக திருகோணமலையில் உள்ள மாகாணக் கல்வி அமைச்சில் இருந்து அதிகாரி ஒருவர் ஜனவரி மாதம் யாழ்ப்பாணம் வரவுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

குடாநாட்டில் ஆயிரத்து 800 பட்டதாரிகள் கடந்த 3 வருடங்களுக்கு மேல் வேலைவாய்ப்பு இன்றி விரக்தியடைந்த நிலையில் இருக்கின்றனர் என்றும் -

இவர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்க உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளாதவிடத்து அஹிம்சை வழியான போராட்டத்தில் ஈடுபடப் போவதாகவும் யாழ்மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தினர் கடந்த வாரம் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், அரச அதிபருக்கும், மாகாணக் கல்வி பண்பாட்டு அலுவல் அமைச்சின் செயலாளருக்கும் மகஜர் ஒன்றை அனுப்பி வைத்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். (க-6)

# குமார் கொலையின் பின்னணியில் அனுருத்தவின் மகன்களில் ஒருவர்?

கொழும்பு,டிசெ.24

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைவராக இருந்த குமார் பொன்னம்பலம் கொழும்பில் அவரது காரில் வைத்து அடையாளம் தெரியாதவர்களால் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தின் பின்னணியில் முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தையின் மகன்களில் ஒருவர் இருப்பதாக கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

குமாரின் படுகொலை உட்பட பொ.ஐ.முவின் முக்கிய பிரமுகர்களின் கட்டளையின் பேரில் நடத்தப்பட்ட சட்டவிரோதச் செயற்பாடுகள் பற்றிய புலன் விசாரணைகளை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா மூடி மறைக்க முயற்சி மேற்கொண்டதாகவும் அப் பத்திரிகை தெரிவித்துள்ளது.

அப்பத்திரிகை மேலும் தெரிவித்திருப்பதாவது:-

குற்றத்துறைப் புலன்விசாரணைப் பணியகத்தின் பணிப்பாளராக இருந்த பந்துல விக்கிரமசிங்க கடந்த செப்ரெம்பரில் குமார் கொலை தொடர்பாக ஜனாதிபதிக்குக் கையளித்த இரகசிய அறிக்கையில் குமார் பொன்னம்பலத்தைக் கொல்வதற்கான உத்தரவுகள் அனுருத்த ரத்வத்தையின் மகனான மகேன் ரத்வத்தையால் வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குமாரினதும் 'சட்டன' பத்திரிகை ஆசிரியர் ரோகண குமாரவினதும் கொலைகள் பற்றி விளக்கிக்கூறிய சிரேஷ்ட பொலீஸ் அதிகாரியான விக்கிரமசிங்கவிடம் அனுருத்தவின் மகன்கள் சம்பந்தப்பட்ட குற்றவியல் நடவடிக்கைகள் பற்றிய எழுத்துமூல அறிக்கையை ஜனாதிபதி கோரினார்.

ஆனால் அந்த அறிக்கையைப் பெற்றுக்கொண்ட பின்னரும் கூட ஜனாதிபதி எந்தவிதமான நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை என்று அப்பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. (க-ஓ)

# யாழ்நகரின் முக்கிய வீதிகளில் நடைபாதை கடைகள் அதிகரிப்பு

## சனக் கூட்டத்தால் போக்குவரத்து நெரிசல்

நத்தார் மற்றும் புதுவருட தினத்தையொட்டி யாழ்நகரப் பகுதியில் நடைபாதை புடைவைக் கடைகள் அதிகரித்துள்ளன.

தீபாவளி தினம் முடிவடைந்ததைத் தொடர்ந்து மறைந்து போயிருந்த இந்தக் கடைகள் புதுவருடத்தையொட்டி மீண்டும் முளைத்திருப்பதைக் காணமுடிகின்றது.

புதுவருட வியாபாரம் களை கட்டியிருப்பதை அடுத்து தினமும் மாலை வேளைகளில் நகரப் பகுதியில் சனக் கூட்டம் அதிகரித்துள்ளது. இதனால் வாகன நெரிசலும் ஏற்பட்டுள்ளது.

இதேவேளை -

நகரின் மையப் பகுதிகளான பஸ் நிலையப் பகுதி, நவீன சந்தைப் பகுதிகளில் மாலை வேளையில் பொலீஸார் சேவையில் ஈடுபடாததால் - போக்குவரத்து ஒழுங்குகள் சீர்குலைந்து விபத்துக்கள் ஏற்படுகின்றன என்றும் சுட்டிக்காட்டப்படுகிறது. (க-4)

வடமராட்சியில் மழையால் பாதிப்புற்ற

# 900 குடும்பங்களுக்கு சமைத்த உணவு; யாழ்.செயலகம் வழங்க ஏற்பாடு

கடும் மழை காரணமாக கரவெட்டி, பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவுகளில் இடம்பெயர்ந்த சுமார் 900 குடும்பங்களுக்கு மூன்று நாள்களுக்கு சமைத்த உணவு வழங்கப்படவுள்ளது.

கொழும்பில் தற்போது தங்கியுள்ள யாழ்.அரச அதிபர் க.சண்முகநாதன், அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் மற்றும் அமைச்சு அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளார் என மேலதிக அரசாங்க அதிபர் து.வைத்திலிங்கம் தெரிவித்தார்.

இதன்படி பருத்தித்துறைப் பிரதேச செயலர் பிரிவில் இருந்து இடம்பெயர்ந்த 160 குடும்பங்களும் -

கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் இருந்து இடம்பெயர்ந்த 738 குடும்பங்களும் - சமைத்த உணவினைப் பெறவுள்ளன.

கடந்த சில நாள்களாகத் தொடர்ந்து பெய்த மழை காரணமாக வடமராட்சியின் தாழ்ந்த நிலப் பகுதியில் வெள்ள அபாயம் ஏற்பட்டதும் -

தென்மராட்சியில் இருந்து இடம்பெயர்ந்து மேற்படி பகுதிகளில் உள்ள அகதிமுகாம்களில் வசிக்கும் குடும்பங்கள் இதனால் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகியமையும் தெரிந்ததே. (க-7-6)

## நாளை

மார்கழி 10
செவ்வாய்க்கிழமை
திதி : தசமி
பிற்பகல் 5.10 வரை.
நட்சத்திரம்: அச்சுவினி
நள்ளிரவு 12.15 வரை.
நத்தார் திருநாள்
சுபநேரம் : 10.56 - 12.26
ராகுகாலம் : 3.26 - 4.56
(பழைய நேரப்படி)

## உதயவாக்கு

குரலை உயர்த்துவது மட்டுமே நல்ல விவாதம் ஆகிவிடாது. கூச்சலிட்டு எதிராளியை அமைதியாக்கிவிட்டதன் மூலம் ஜெயித்துவிட்டதாக நினைப்பது முட்டாள்தனம்.

# வீதிகள் எங்கும் கற்கள் குவிப்பு; திருத்தவேலை நடப்பதாக இல்லை!

யாழ்ப்பாணம்,டிசெ.24

குடாநாட்டின் பல்வேறு இடங்களிலும் வீதிகளில் திருத்த வேலைகளுக்காகக் கற்கள் பறிக்கப்பட்டும் நீண்டகாலமாக வேலைகள் ஆரம்பிக்கப்படாமையால் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

குடாநாட்டிலுள்ள பெரும்பாலான பிரதேச சபைகளில் வீதிகளின் புனரமைப்புக்கென ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து இந்தக் கற்கள் பறிக்கப்பட்டிருந்தாலும் வீதியை திருத்துவதற்குரிய ஏனைய வேலைகள் எதுவும் இதுவரை முன்னெடுக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

வீதிகளில் கற்கள் குவிந்து கிடப்பதால் பல்வேறுவிதமான கஷ்டங்கள், சிரமங்களை மக்கள் அனுபவித்து வருகின்றனர். இந்த நிலைமையால் விபத்துக்களும் இடம்பெற்று வருகின்றன.

வீதியோரங்களில் குவிக்கப்பட்ட கற்கள் அங்கும் இங்கும் சிதறிக் கிடப்பதால் மக்கள் போக்குவரத்தில் ஈடுபடுவதிலும் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். (க-4-85)

## குடாநாட்டில் கரோல் நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,டிசெ.24

நத்தார் தினத்தை முன்னிட்டு இயேசு கிறிஸ்துவின் பிறப்பை அறிவிக்கும் முகமாக, குடாநாட்டில் பல்வேறு பகுதிகளிலும் 'கரோல்' நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

கிறிஸ்தவ அமைப்புகள் மற்றும் நிறுவனங்கள், ஆலயங்கள் என்பன குடாநாட்டில் பரவலாக இந்த நிகழ்வுகளை நடத்தி வருகின்றன.

கிராமங்கள் தோறும் குழுக்களாகச் செல்லும் 'கரோல்' குழுவினர் வீடு வீடாகச் சென்று கிறிஸ்தவப் பாடல்களைப் பாடியும் ஆடியும் கிறிஸ்துவின் பிறப்பை அறிவித்து வருகின்றனர். (க-4)

## மானிப்பாய் - பொன்னாலை வீதியில் மதகு புனரமைப்பு

மானிப்பாய் - பொன்னாலை வீதியில் உள்ள மதகுப் புனரமைப்பு வேலை முடிவடையும் நிலையில் உள்ளது.

இம்மதகுபுனரமைக்கப்படாமையினால் கடந்த வருடங்களில் உச்சியோடைக் கிராமத்தில் பல வீடுகள் வெள்ளப் பெருக்கில் அகப்பட்டு மக்கள் புலம் பெயரும் நிலையும் ஏற்பட்டு வந்தது தெரிந்ததே. (க-7-90)

# பொ.ஐ.முன்னணிக்குக் கிடைத்த தோல்வி முற்போக்கு சக்திகளுக்குப் பின்னடைவு

## கம்யூனிஸ்ட் கட்சி கூறுகிறது

கொழும்பு,டிசெ.24

தேர்தலில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அடைந்த படுதோல்வி முற்போக்குச சத்திகளுக்கு கிடைதத பின்னடைவாகும் என்று இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி வெளயிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

பொ.ஐ.முன்னணி பிரசாரத்தை முன்னெடுத்த பாங்கு, சிறுபான்மை இனத்தவரையும், சிறுபான்மை மதத்தினரையும் அப்பால் விரட்டியிருந்தது என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பொ.ஐ.முன்னணிக்கும், ஜே.வி.பிக்கும் மொத்தமாக 47 சதவீத மக்கள் வாக்களித்திருக்கிறார்கள். இதனை அரசாங்கம் நன்கு கவனத்தில் எடுத்துக்கொள்ளவேண்டும். இனப்பிரச்சினை விவகாரத்தில் வரைவான தீர்வை ஏற்படுத்தும் விடயத்தில் முற்போக்கு சக்திகள் மற்றும் இடதுசாரி சக்திகள் ஐக்கிய தேசிய முன்னணி அரசுக்கு தமது ஆதரவை வழங்கும் என்றும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொ.ஐ.முன்னணியின் வாக்குகளை ஜே.வி.பி. பங்குபோட்டுக் கொண்டதால் ஐ.தே.மு. பல மாவட்ட மட்டத்து 'போனஸ்' ஆசனங்களைப் பெற்றுக்கொண்டது என்றும் அதில் கூறப்பட்டுள்ளது.

(க)

# கண்ணீர் அஞ்சலிகள்



திருமதி

**உமாதேவி மோகனதாஸ்**

*(ஆசிரியை,*
*யா/வல்வை சிவகுரு வித்தியாசாலை)*

**ஓ ஆசிரியையே!**
**உம் நிலை கண்டு**
**கலங்குதே எங்கள் உள்ளம்**
**ஊருக்குள் உத்தமர்களை உருவாக்கி**
**உண்மை என்ற அறிவை நிலைநாட்டி**
**மழலைகளை சிரிக்க வைத்து**
**மன நிறைவை ஏற்படுத்தி**
**எங்களின் மனங்களில் நிறைந்துவிட்டாய்!**

22.12.2001 அன்று காலமான எமது ஆரம்பப் பிரிவு சிரேஷ்ட ஆசிரியை திருமதி உமாதேவி மோகனதாஸ் க்கு எமது கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குவதோடு துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அன்னாரது ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனை உளப்பூர்வமாகப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
யா/வல்வை சிவகுரு வித்தியாசாலை,
*வல்வெட்டித்துறை.*

(96238)

## சாயி சமித்தியில் கிறிஸ்மஸ் விழா

யாழ்ப்பாணம்,டிசெ.24

யாழ்.பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையத்தில் நாளை கிறிஸ்மஸ் விழா இடம்பெறும்.

பிற்பகல் 3.55 மணிக்கு நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும். கிறிஸ்தவ கீதங்கள் பாடப்படும். அருட்தந்தை சி.ஜே.ஜெயக்குமார் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார்.

(ஐ)

# வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்

# கேள்வி அறிவித்தல்

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி :- 2001.12.24 - 2001.12.27 பி.ப. 2.00 மணிவரை.
கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்
கடைசித் திகதி :- 2001.12.28 நண்பகல் 12.00 மணி.
கேள்விப்பத்திரம் திறந்து பார்க்கப்படும் திகதி :- 2001.12.28 பி.ப. 2.00 மணி.

**ஒவ்வொரு வேலைக்கும் அதற்கெதிரே காட்டப்படும் மீளளிக்கப்படும், மீளளிக்கப்படாத கட்டணங்களைச் செலுத்துபவர்களுக்கு மட்டுமே கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும்.**

| வேலையின் விவரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திர வைப்புப் பணம் ஜி.எஸ்.ரி. அறவிடப்படும். |
|---|---|---|
| **வடக்கின் மீள் குடியேற்ற புனரமைப்பு அதிகாரசபை நிதி** | | |
| 01. திடற்புலம் சனசமூக நிலையம் புனரமைப்பு | 1000.00 | 250.00 |
| 02. ஐயன்னா சனசமூக நிலையம் புனரமைப்பு | 1000.00 | 250.00 |
| 03. கலைமகள் சனசமூக நிலையம் புனரமைப்பு | 750.00 | 150.00 |
| 04. வளர்பிறை முன்பள்ளிக்கான கட்டட புனரமைப்பு | 1000.00 | 250.00 |
| 05. புவனேஸ்வரி அம்பாள் சனசமூக நிலையம் புனரமைப்பு | 1000.00 | 250.00 |
| 06. ஏழாலை வடக்கு சனசமூக நிலையம் புனரமைப்பு | 1500.00 | 250.00 |
| 07. மருதனார்மடம் சந்தை புனரமைப்பு (கட்டம் - 1) | 2250.00 | 250.00 |
| 08. ஏழாலை கிராம அபிவிருத்திச் சங்கம் கட்டடம் புனரமைப்பு | 1000.00 | 250.00 |
| 09. ஏழாலை மத்திய சனசமூக நிலையம் புனரமைப்பு | 1750.00 | 250.00 |
| 10. பாரதி சனசமூக நிலையம் புனரமைப்பு | 1000.00 | 250.00 |
| 11. ஞானகலா சனசமூக நிலையம் புனரமைப்பு | 1000.00 | 250.00 |
| 12. சிவசக்தி சனசமூக நிலையம் புனரமைப்பு | 4000.00 | 250.00 |
| 13. உதயசூரியன் சனசமூக நிலையம் புனரமைப்பு | 1500.00 | 250.00 |
| 14. ஞானப்பிரகாசர் கலையரங்கு புனரமைப்பு | 750.00 | 150.00 |
| 15. ஆரம்ப சுகாதார நிலையம் புனரமைப்பு | 300.00 | 50.00 |
| **சமுதாய நிதி** | | |
| 16. மருதனார்மடம் சந்தை புனரமைப்பு (கட்டம் - II) | 10,000.00 | 1000.00 |

பூர்த்திசெய்யப்பட்ட கேள்விப்பத்திரங்களின் மூலப்பிரதியை "தலைவர், வலிகாமம் தெற்கு பிர தேச சபை, சுன்னாகம்" என்ற முகவரிக்கும், அதன் பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம்" என்னும் முகவரிக்கும் உரியகாலத்திற்கு முன்னர் பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ அனுப்பிவைக்கப்படல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் வேலையின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும். மேலதிக விவரம் தேவைப்படுவோர் அலுவலக நேரத்தில் சபையின் பணிமனையில் பெற்றுக்கொள்ளலாம்.

*குறிப்பு:-* இக்ராட் நிறுவனத்திலும் திணைக்களங்களிலும் பதிவு செய்தவர்களுக்கே ஒப்பந்தப் பத்திரங்கள் வழங்கப்படும்.
ஒப்பந்தகாரருக்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவில் கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படும்.

**க.கமலசேகரன் ஜே.பி.யூ.எம்.,**
தலைவர்,
வலிகாமம் தெற்கு பிரதேச சபை,
சுன்னாகம்.

வலிகாமம் தெற்கு பிரதேச சபை,
சுன்னாகம்.
2001.12.21

(C/19913)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 30 - 12 - 1947



மறைவு 24 - 11 - 2001

## அமரர் கந்தையா கமலராஜா

*"சிகிச்சையென இந்தியா சென்றாய்"*
*திரும்பியதோ உன் அஸ்திதான்*
*தினங்கள் 30 கடந்தாலும்*
*தீருமா எம் மனதில் உன் நினைவு!*
*என்றென்றும் மாறாது.......*

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*128, அம்பலவாணர் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

சகோதர, சகோதரிகளும்
குடும்பத்தினர்களும்.

(96240)

# மரண அறிவித்தல்கள்

## பிரான்சிஸ் சேவியர் (ஆமி செல்லத்துரை)

பிரான்சிஸ் சேவியர் 21.12.2001 வெள்ளிக்கிழமை காலமானார்.

இவர் றீற்றா (மிசி)வின் அன்புக் கணவரும், சுரேன், டினித்தா, டினா ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதி அல்பிறேற் திரேசம்மாவின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று 24.12.2001 காலை 10.30 மணியளவில் 33/14, அடப்பன் வீதியில் இருந்து கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*33/14, அடப்பன் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (96239)

தகவல்:
கருணாகரன் (ஜெயநேசன்)

## சின்னத்தம்பி யோகராசா

மந்துவில் கிழக்கு, கொடிகாமத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் நவாலி வீதி, குளத்தடி, சங்கரத்தையை தற்காலிக முகவரியாகக் கொண்ட சின்னத்தம்பி யோகராசா நேற்று (23.12.2001) ஞாயிறு காலமானார்.

அன்னார் சின்னத்தம்பி - செல்லாச்சி தம்பதியினரின் அன்பு மகனும், ஞானம்மாவின் ஆசைக் கணவரும், உதயணன் (சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், சாவகச்சேரி), இமயாணன் (யாழ்.சாவகச்சேரி இந்துக் கல்லூரி), யுகதர்ஷன் (வவுனியா), சுதர்சினி (யாழ்.வட்டு. மத்திய கல்லூரி), சுதாங்கனி (யாழ்.வட்டு.மத்திய கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.12.2001) முற்பகல் 10 மணியளவில் அவரது தற்காலிக இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வழுக்கியாறு இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தற்காலிக முகவரி:**
*குளத்தடி, சங்கரத்தை, வட்டுக்கோட்டை.*

தகவல்:
யோ.உதயணன் (மகன்)

(96241)

## விக்டோறியா முத்தையா (இராசம்மா)

466/7, கோயில் வீதி, முதலாம் ஒழுங்கை, சம்புவானியார் கோயிலடி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், தற்போது கொழும்பில் வசித்தவருமான விக்டோறியா முத்தையா நேற்றுமுன்தினம் (22.12.2001) சனிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான லூக்காஸ் - றோசம்மா தம்பதியினரின் அன்பு மகளும், செபஸ்ரியாம்பிள்ளை முத்தையாவின் அன்பு மனைவியும், றோச், அருளானந்தம், பிலோமினா (பவளம்), கிறிஸ்ரீனம்மா (புஸ்பம்), ஜெயரெட்ணம் (பிரான்ஸ்), ராணி பிறிசிற்றம்மா (பிரான்ஸ்), ஜெயராணி (ஜோண் of ஆர்க் - கனடா), றீற்றா (லண்டன்), காலஞ்சென்ற கிறிஸ்ரியன் மற்றும் கொன்சி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்றவர்களான பாக்கியம், சேவியா, நவம், அந்தோனிப்பிள்ளை, நேசம்மா, நடராஜா ஆகியோரின் அன்புச் சகோதரியும், பிரண்டா (கொழும்பு), தவம், வின்சன்ற் (கொழும்பு), றூபசிங்கம் (யா/மாநகர சபை வேலை மேற்பார்வையாளர்), ஸ்ரெலா (பிரான்ஸ்), டங்கன் (பிரான்ஸ்), ஏபிரகாம் (கனடா), பற்றிமாகரன் (லண்டன்), வலன்ரைன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், றுக்மன், தர்சி, ஜெவ்றி, சோ்மி, சாந்தி, ஜோ, ஜெயா, காலஞ்சென்ற மைக்கல் மற்றும் யூட், கெலன், பியோ, கெவின், சாமுவேல், சுசான், றுக்சான், அன்ரொயின், றொசான், டில்ஷான், றொஷானி, றஷெல், பிரபு, சாம் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.12.2001) திங்கட்கிழமை பி.ப. 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நாயகந்த கத்தோலிக்க மலர்ச்சாலையில் நல்லடக்கம் செய்யப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*466/7, கோயில் வீதி,*
*முதலாம் லேன், சம்புவானியார் கோயிலடி,*
*சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.* (96245)

தகவல்:
P.E.றூபசிங்கம்
(பாலசிங்கம் - மருமகன்)

## திருமதி சிதம்பரத்தி மாணிக்கம்

கோண்டாவில் தில்லையம்பதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சிதம்பரத்தி மாணிக்கம் நேற்று (23.12.2001) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மாணிக்கத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற நல்லம்மா மற்றும் கனகம்மா, குணசிங்கம் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்றவர்களான செல்லர், சண்முகத்தினதும் மற்றும் சூரியகலா (கனடா) ஆகியோரின் மாமியாரும், குணசேகரம், மகேஸ்வரி, உத்தமதேவி, கமலாவதி, தியாகராஜா, பரமேஸ்வரி, நாகேஸ்வரி, கோபாலசிங்கம், பிறேமாவதி, மகேஸ்வரி, மங்கயற்கரசி, ஜெயக்குமார் (கனடா), ஜெயக்குமாரி, சாந்தகுமாரி (கனடா), சூரியகுமார் (கனடா), தர்சினி (கனடா), ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.12.2001) காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காகக் கோண்டாவில் காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கோண்டாவில் தில்லையம்பதி,*
*கோண்டாவில்.* (96243)

தகவல்:
குகராஜன் ஜெயக்குமாரி (பேர்த்தி)

## பிரதமரின் செயலாளர்கள்

கொழும்பு,டிசெ.24

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அந்தரங்கச் செயலாளராக சுதத் சந்திரசேகர நியமிக்கப்பட்டுள்ளார். பிரதமரின் ஊடகச் செயலாளராக சமன் அதாவுத ஹெட்டியும் இணைப்புச் செயலாளராக கே.பி.தயாரத்னவும் நியமிக்கப்பட்டுள்ளனர். (ஐ)

# தகவல் திணைக்களம் விரைவில் மூடப்படும்

கொழும்பு,டிசெ.24

அரசாங்கத் தகவல் திணைக்களத்தின் பணிகள் முடிவுக்கு கொண்டு வரப்படும். அதற்குப் பதிலாக வேறு ஒரு நிறுவனத்தை புதிதாக ஏற்படுத்துவது என்று அரசாங்கம் தீர்மானித்திருப்பதாகத் தெரிகிறது.

அரசாங்கம் வகுத்துள்ள புதிய திட்டத்தின்படியே தகவல் திணைக்களத்தின் பணிகள் முடிவுக்குக் கொண்டு வரப்படவுள்ளன. புதிய நிறுவனம் அடுத்த வருட ஆரம்பத்தில் செயற்படத் தொடங்கும் என்று தகவலறிந்த அரசாங்க வட்டாரங்கள் கூறுகின்றன. (ஐ)

# பருத்தித்துறை நகராட்சி மன்றம்
# ஆதன வரி - 2002

**255ஆம் அதிகாரமான நகர சபை கட்டளைச் சட்டத்தின் 166 ஆவது உப-பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம், பருத்தித்துறை நகராட்சி மன்றம் குறித்த கட்டளைச்சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள தத்துவத்திற்கமைவாக பின்வருமாறு வரியிறுப்பாளருக்கு அறிவித்தல் செய்கின்றது.**

01. பருத்தித்துறை நகராட்சி மன்ற எல்லையினுள் உள்ள அனைத்து ஆதனங்களிற்கும் 2001ஆம் ஆண்டில் அறவிடப்பட்ட விதமாக அவற்றின் வருடாந்தப் பெறுமதியில் 12 சதவீதமான தொகை ஆதன வரியாக விதித்து அறவிடப்படும்.

02. (அ) குறிப்பிட்ட சதவீத வரிப்பணங்கள் யாவும் நான்கு சம கந்தாயத்தவணையில் 2002ஆம் ஆண்டு முறையே மார்ச் 31, ஜூன் 30, செப்ரெம்பர் 30, டிசெம்பர் 31ஆம திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ செலுத்தப்படல் வேண்டும்.

(ஆ) 2002ஆம் ஆண்டு ஜனவரி 31ஆம் நாளில் அல்லது அதற்கு முன்னர் வருடாந்த விகிதங்கள் முழுமையாகச் செலுத்தப்பட்டால் ஒரு 10% (பத்து வீதம்) கழிவு அனுமதிக்கப்படும் என்பதுடன், வருமதியாகவுள்ள அந்தக் கந்தாயத்துக்குரிய முதல் மாதத்துக்குள்ளாக கந்தாய வீதம் செலுத்தப்பட்டால் 5% (ஐந்து வீதம்) கழிவு அனுமதிக்கப்படும்.

03. மேற்குறிப்பிட்ட பந்தி 2 (அ) இன்படி சொல்லப்பட்ட காலங்களில் செலுத்தப்படாதவிடத்து, வெற்றுக் காணிகள் மற்றும் வதிவிடங்கள் மீது 15% (பதினைந்து வீதம்) மற்றும் சகல ஏனைய இடங்கள் மீது 20% (இருபது வீதம்) வீதத்திலுமான விறாந்துச் செலவு அறவிடப்படும்.

| | |
|---|---|
| **ச.அன்ரன் கிறைசிஸ்** | **நா.மணிவண்ணன்,** |
| செயலாளர், | ஜே.பி.யு.எம். |
| நகராட்சி மன்றம், | உப-தலைவர், |
| பருத்தித்துறை. | நகராட்சி மன்றம், |
| | **பருத்தித்துறை.** |

நகராட்சி மன்ற அலுவலகம்,
*பருத்தித்துறை, 21.12.2001.* (C/19916)

# 'பேரறிஞர்', பேராயர் கலாநிதி எஸ்.ஜெபநேசன் அடிகளுக்கு வாழ்த்துமடல்!



கல்விப் புலமையும் கலைப் பேரார்வமும் கைகோத்து நடைபயிலும் தென்னிந்தியத் திருச்சபைப் பேராயர்
கலாநிதி எஸ்.ஜெபநேசன் அடிகளுக்கு
*லண்டன் கேம்பிறிட்ஜ் வரலாற்றாய்வாளர் நிறுவனம்*
இருபதாம் நூற்றாண்டுப் 'பேரறிஞர்' விருது வழங்கிச் சிறப்பித்துள்ளது.

அறிவுப் பணியையும், ஆன்மீகப் பணியையும் ஆழ்ந்தகன்ற பரப்பில் செய்துவரும் பேராயர் அவர்களின் தமிழ்ப் புலமையும் ஆங்கிலப் புலமையும் உலகறிந்தவை. மதப் பணியாளர்களின தலைவனாக இருந்துகொண்டே மக்கள் பணியும், கலைப் பணியும் செய்துவருகின்ற பேராயர், 'சிலப்பதிகாரப் பித்தராக'வும் 'பாரதிப் பிரியனாக'வும் காட்சி தருகின்றார். கலைஞர்களையும் கவிஞர்களையும் இலக்கியவாதிகளையும் ஆராதித்துப் போற்றும் பேராயர் கலாநிதி எஸ்.ஜெபநேசனை 2000 பேறறிஞர்களில் ஒருவராகத் தேர்தெடுத்துள்ளது லண்டன் கேம்பிறிட்ஜ் வரலாற்றாய்வாளர் நிறுவனம். பேராயர் ஆன்மீகத்துறை சார்ந்தும் அறிவுத்துறை சார்ந்தும் எழுதியுள்ள நூற் படைப்புக்களுக்காகவும், படிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரைகளுக்காகவும் சூடப்பெற்ற சிறப்பு மகுடமே இப்'பேரறிஞர்' விருது!

ஈழத் தமிழ்மகன் ஒருவனுக்குக் கிடைக்கப்பெற்றுள்ள ஈடிணையில்லாப் புகழாரமாக இப்'பேரறிஞர்' விருதை மதித்துப் போற்றி, பேராயர் கலாநிதி எஸ்.ஜெபநேசன் அடிகளின் அறிவுப் பணியும் ஆன்மீகப் பணியும் பெருகித் தழைக்க வாழ்த்துவதுடன் அவர் பல்லாண்டு காலம் வாழ்ந்து பலவளமும் பெற எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர் சங்கம் (குருமார்),
தென்னிந்தியத் திருச்சபை.

(C/19910)

## அம்பாறையில் அடைமழை

மட்டக்களப்பு,டிசெ.24

அம்பாறை மாவட்டத்தில் அடைமழை பொழிந்துள்ளது. இதனால் தாழ் நிலப் பகுதிகளில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. கடும் குளிரும் வீசுகிறது. உள்ளூர் வீதிகளில் வெள்ளம் தேங்கி நிற்கிறது.

கல்முனை, காரைதீவு, சம்மாந்துறை, நிந்தாவூர், அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று, திருக்கோவில், ஆலையடிவேம்பு, பொத்துவில் போன்ற பிரதேசங்களில் தாழ் நிலப் பரப்புகளில் வாழ்ந்துவந்த சுமார் 4000 குடும்பங்கள் வெள்ளம் காரணமாக இடம்பெயர்ந்து பாதுகாப்பான பிரதேங்களில் குடியேறியுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. (ஐ)

## வன்னி மக்களின் அவலங்கள் அமைச்சரின் கவனத்துக்கு

கொழும்பு,டிசெ.24

கடும் மழையால் வவுனியா, முல்லைதீவு மாவட்டங்களில் உள்ள மககள் படும் துயரத்தை வன்னி மாவட்ட எம்.பி. அடைக்கலநாதன் புனர்வாழ்வு, மீளகுடியமர்வு அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தனாவின் கவனத்துக்குக் கொண்டுவந்திருக்கிறார்.

பலர் இடம்பெயர்ந்து அவதிப்படுகிறார்கள். வீடுகள், சொத்துகள், பயிர் பச்சைகள் எல்லாம் அழிந்துவிட்டன. உணவுக் கஷ்டம், அத்தோடு மழை நீர் வடியாமல் தேங்கி நிற்பதால் தொற்று நோய் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இவற்றை நிவர்த்தி செய்ய வேண்டும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு கஷ்ட நிவாரணம் வழங்க வேண்டும், நஷ்ட ஈடும் கொடுக்கவேண்டும் என்று அமைச்சரை அடைக்கலநாதன் கேட்டிருக்கிறார். (ஐ)

## ஒளிவிழா

கோப்பாய்,டிசெ.24

யாழ்ப்பாணம் தாதியர் பயிற்சிக் கல்லூரி மாணவர்களின் ஒளிவிழா நிகழ்ச்சிகள் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு கல்லூரி விரிவுரை மண்டபத்தில் பயிற்சிக் கல்லூரி அதிபர் தலைமையில் நடைபெற உள்ளது. (ஐ-72)

நிறைஞ்சனாஸ்
சாங்கானை
இன்று மட்டும்
அஜித், தேவயானி, பார்த்திபன நடித்த
நீ வருவாய் என
(ரீல்ஸ்)
காட்சிகள்: 11.00, 2.30, 5.30
நாளை 25.12.2001 முதல்
ஒன்ஸ்மோர்
(C/19779)

ராஜா யாழ்ப்பாணம்
விஜய்,
ரம்பா, தேவயானி
நடித்த
நினைத்தேன் வந்தாய்
(ரீல்ஸ்)
தினசரி:- 10.30, 2.00 (புதிய நேரம்)
சனி, ஞாயிறு 10.30, 2.00, 5.00
(C/19778)

நாகம்ஸ் சுன்னாகம்
கமல் (இரட்டை வேடம்),
மனிஷா, ரவீனா
மற்றும் பலர் நடித்த
ஆளவந்தான்
காட்சிகள்: 11.00; 3.00 (புதிய நேரம்)

லஷ்சுமி இணுவில்
3ஆவது வாரம்
பிரசாந்த், ஷாலினி நடித்த
பிரியாத வரம் வேண்டும்
(ரீல்ஸ்)
தினசரி: 10.30, 2.30 (பழைய நேரம்)

விற்பனைக்கு
2002ஆம் ஆண்டுக்கான வண்ண வண்ணக் கலண்டர்கள், அழகிய டயறிகள் முதலானவற்றை மலிவு விலையில் பெற்றுக்கொள்ள
ஸ்ரீமுருகன்
303, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.
T.P.021-2670. Fax 3214
(C/19918)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி தம்பித்துரை மரியம்மா

இல. 693 (185), ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தம்பித்துரை மரியம்மா நேற்று (23.12.2001) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற யக்கரன் - எலிசபேத் தம்பதியினரின் பாசமிகு புதல்வியும் த.அ.தம்பித்துரையின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான யோசேப்பு, அருளப்பு, மனுவேற்பிள்ளை, திரேசம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் மற்றும் யோசேப்பின் (புஸ்பம்) இராசேந்திரன், திரேசம்மா, மைக்கல், அலெக்சான்டர் ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரியும், அன்ரன், கிறிஸ்ரி, பொபி, ரவீந்திரன், மனோகரன் (பிரான்ஸ்), சகுந்தலா, ஞானமணி, பப்சி (பிரான்ஸ்), ஜெரின்ஜலா (பிரான்ஸ்), ரஞ்சிதமணி, புஸ்பராணி, கமலாதேவி (கனடா), பரமேஸ்வரி (பிரான்ஸ்), ராணி (பிரான்ஸ்), சௌந்தரராஜன், சிறீதர், ஜெனா (லண்டன்), திருமதி இன்பநிதி - சுதர்சினி (பிரான்ஸ்) ஆகியோரின் பேர்த்தியும் கலா, றஜனி, ரவீந்திரன், சுசிலாமணி (ஆசிரியை), காலஞ்சென்ற அழகரத்தினம் மற்றும் பஞ்சலோகறஞ்சன் (G.S.), ராசகுமார் ஆகியோரின் மாமியாரும், காலஞ்சென்றவர்களாகிய சரஸ்வதி, இராசையா மற்றும் யோகம்மாவின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை அடைக்கல அன்னை ஆலயத்தில் இன்று (24.12.2001) திங்கள் 3.30 மணிக்கு (புதிய நேரம்) திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு நல்லடக்கத்துக்காக பூதவுடல் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
த.அ.தம்பித்துரை (J.P.)
(கணவர்)
(யாழ்.பஸ் நிலைய வைரவர் ஆலய தர்மகர்த்தா)

*இல.693 (185),*
*ஆஸ்பத்திரி வீதி,*
*யாழ்ப்பாணம்.* (96247)

## விநாயகர் சொக்கலிங்கம்

காரைநகரைப் பிறப்பிடமாகவும் பிள்ளையார் வீதி, திருநெல்வேலி மேற்கை வதிவிடமாகவும் கொண்ட விநாயகர் சொக்கலிங்கம் 22.12.2001 அன்று வவுனியாவில் காலமானார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்
சொ.உத்தமசீலன்
(மகன்)

*பிள்ளையார் வீதி,*
*திருநெல்வேலி மேற்கு.* (96248)

## முத்துக்குமாரு கனகரத்தினம்

ஊர்காவற்றுறை, தம்பாட்டியைச் சேர்ந்த முத்துக்குமாரு கனகரத்தினம அவர்கள் நேற்று (23.12.2001) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் இரத்தினத்தின் கணவரும், காலஞ்சென்றவர்களான முத்துக்குமாரு - பொன்னம்மா தம்பதியினரின் மூத்த மகனும், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற சிவகுரு - பொற்கொடி தம்பதியினரின் மூத்த மருமகனும், ருக்மணி, காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை மற்றும் கந்தையா, கனகசுந்தரம், அன்னரெத்தினம், கந்தஞானி, தெய்வமணி, காலஞ்சென்ற கனகமணி மற்றும் பார்வதி, ஞானசுந்தரம் ஆகியோரின் அன்புமிகு சகோதரரும், தவமணிதேவி, லோகநாதன் (பிரான்ஸ்), விஜயகுமாரி (கிளிநொச்சி), ஜெயகுமாரி (பிரான்ஸ்), விஜயகுமாரன் (பிரான்ஸ்), இராசகுமாரன் (பிரான்ஸ்), விஜயரெத்தினகுமாரி, சிறிக்குமாரன், செல்வக்குமாரன் (பிரான்ஸ்), காந்தரூபன் ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும், காலஞ்சென்ற சரஸ்வதி, ஜெகதீஸ்வரி, கைலாயபிள்ளை (பிரான்ஸ்), சுந்தரலிங்கம் (பிரான்ஸ்), சற்குணவதி (பிரான்ஸ்), தாமோதரம்பிள்ளை, சிவநேசபிள்ளை, சந்திரன் ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்ற சவுந்தரியம்மா, சரஸ்வதி, யோகம்மா, காலஞ்சென்ற புனிதவதி, வசந்தராணி, உத்தமி, இராமச்சந்திரன், பற்மநாதன் (கிளிநொச்சி), ரமேஸ்வரன் (பிரான்ஸ்), செந்திவேல், யசோதா, இராசலெட்சுமி, ரதிதேவி (பிரான்ஸ்), மனோகலா, சந்திரகலா, சுஜாதா ஆகியோரின் அன்புமிகு மாமனாரும், காலஞ்சென்ற சுப்பிரமணியம், தங்கவடிவேல், மார்க்கண்டு (பிரான்ஸ்) ஆகியோரின் சகலனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று இன்று (24.12.2001) திங்கட்கிழமை தகனக்கிரியைக்காக பூதவுடல் பிற்பகல் 2.00 மணிக்கு தம்பாட்டி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி.இராமச்சந்திரன் (மருமகன்)
(தம்பாட்டி)

*தம்பாட்டி,*
*ஊர்காவற்றுறை.* (96257)

## திருமதி நல்லையா சின்னம்மா
### (தங்கம்)

மண்கும்பான் கிழக்கு, 4 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த, திருமதி நல்லையா சின்னம்மா (தங்கம்) நேற்று, (23.12.2001), ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் மண்கும்பான் கிழக்கு, 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட வீரகத்தி - சிவக்கொழுந்து தம்பதியினரின் அன்பு மகளும் சுபாநாயகம் நல்லையா அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற பூமணி, சுப்பிரமணியம், கந்தையா ஆகியோரின் அன்புச் சகோதரியும் நாகபூசணி, செல்வபாக்கியம் (கொழும்பு), காலஞ்சென்ற குணரெத்தினம் மங்களேஸ்வரன் (கொழும்பு), ராணி (முழங்காவில்), சிவகுமார் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், செல்லையா, (காலஞ்சென்ற சுந்தரலிங்கம் (கொழும்பு - வெள்ளவத்தை), தவநாயகம்(முழங்காவில்), உதயகுமாரி ஆகியோரின் மாமியாரும் வளர்மதி, மைதிலி, செந்தில், கண்ணன், செந்தில்கிருஷ்ணன், கல்பனா, தவப்பிரியா, ஜெயப்பிரியா, கோபிநாத், முரளி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
வீ.கந்தையா
(தம்பி)

*மண்கும்பான் (கிழக்கு),*
*4ஆம் வட்டாரம்.* (96250)

## மீனவர் திரும்பவில்லை

மன்னார் வலைப்பாடு கடலுக்கு கடந்த வெள்ளியன்று தொழிலுக்குச் சென்ற மீனவர்கள் இருவர் இன்னமும் கரைதிரும்பவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

லூயிஸ் றோமியப்பர் யோகராசு (வயது 45), அவரது மகனான றோமியப்பர் ரிஜிதன் (வயது 17) ஆகிய இருவருமே காணாமற்போயுள்ளனர். (ஐ-164)

## நோர்வே....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ராவுடனும் உரையாடினார்.

விடுதலைப் புலிகளுடன் பேச்சு ஆரம்பிப்பதென்ற இலங்கை அரசின் முடிவை வரவேற்ற நரசிம்மராவ், இலங்கைக்கு விஜயம் செய்யவேண்டும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விடுத்த வேண்டுகோளை ஏற்றுக்கொண்டார்.

முன்னாள் இந்தியப் பிரதமர் ஐ.கே.குஜ்ரால், இந்தியத் தகவல்துறை அமைச்சர் சுஸ்மா சுவராஜ் ஆகியோரையும் பிரதமர் நேற்று மாலை சந்திக்க இருந்தார்.

பிரதமர் தலைமையிலான இலங்கை அரச குழுவினர் இன்று இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பேயைச் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளனர். (ஐ-6-9)

## மன்னாரில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
காயமடைந்தார்.

. இதேவேளை -

வவுனியா கணேசபுரம் பகுதியில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் இளைஞன் ஒருவரின் சடலம் பொலிஸாரால் மீட்கப்பட்டு வவுனியா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு 10 மணியளவில் இவர் சுடப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வவுனியா மணிபுரம் பகுதியைச் சேர்ந்த தவநாதன் றமணன் (வயது-21) என்பவரே கொல்லப்பட்டவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

# செயலகத்தை முற்றுகையிட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மறுபரிசீலனை செய்யவேண்டும் -

அந்த 167 பேர் பற்றிய உண்மையான, உறுதியான பதிலை புதிய அரசு தரவேண்டும் -

வன்செயல்களால் இறந்ததாகத் தெரிவிக்கப்பட்டோர் தவிர்ந்த ஏனையோர் எங்கே?

அவர்களுக்கான நீதி விசாரணைகள் எப்போது நடை பெறும்? என்பது பற்றி யாழ்.அரச அதிபர் எழுத்து மூலம் உறுதியான பதில் தரவேண்டும் -

காணாமற்போன பிள்ளைகளை பெற்றோர்கள் சந்தித்து உரையாட வசதி செய்து தரவேண்டும் -

இவை போன்ற பல கோரிக்கைகளை முன்வைத்தே இந்த மறியற் போராட்டத்தில் தாம் ஈடுபடவுள்ளதாகக் காணாமற் போனோர் பாதுகாவலர் சங்கத்தின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இன்று ஆரம்பமாகும் மறியற் போராட்டத்துக்கு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம், யாழ்.பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம், கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாஜம், அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம், ஓட்டோ உரிமையாளர் சங்கம், இந்து சமயப் பேரவை, மனித முன்னேற்ற நடு நிலையம் உட்படப் பல அமைப்புகள் ஆதரவு தெரிவித்துள்ளன.

தாங்கள் இந்தப் போராட்டத்தை ஆரம்பிப்பது தொடர்பாக ஏற்கனவே பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு மகஜர் மூலம் தெரியப்படுத்தியுள்ளதாகக் கைதுசெய்யப்பட்டு காணாமற்போனோரின் பாதுகாவலர் சங்கம் தெரிவித்துள்ளது.

காலவரையறையற்ற இந்த மறியற் போராட்டம் காரணமாக யாழ். அரச செயலகம், பிரதேச செயலகம் ஆகியவற்றின் நாளாந்தப் பணிகள் முற்றாகத் தடைப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ-6-8-9-10)

# கிறிஸ்தவ தேவாலயங்களில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
னைகளில் மக்கள் கலந்துகொள்ள வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது.

யாழ்நகரில் உள்ள கத்தோலிக்க தேவாலயங்களில் இன்று நள்ளிரவு பிரார்த்தனைக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

யாழ்.பேராலயத்தில் இன்று நள்ளிரவு 11.30 மணிக்கு யாழ்.ஆயர் அதிவண. தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் முதலாவது நத்தார் கூட்டுத்திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

இந்த நிகழ்ச்சி இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் யாழ்சேவையில் நேரடி ஒலிபரப்புச் செய்யப்படவுள்ளது.

நாளை காலை 6.30 மணிக்கு ஆயர் தலைமையிலான இரண்டாவது கூட்டுத்திருப்பலியும் 8 மணிக்கு மூன்றாவது கூட்டுத்திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்படும் என்று ஆலய பங்குத் தந்தை தெரிவித்தார்.

சுண்டிக்குளி பரியோவான் ஆலயத்திலும் இன்று இரவு 11.30 மணி முதல் பரிநற்கருணை ஆராதனை அருட்திரு பீ.நேசகுமார் அடிகள் தலைமையில் நடைபெறும்.

கிழக்கில் உள்ள தேவாலயங்களிலும் இன்று நள்ளிரவு ஆராதனை நடைபெறவுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இன்று இரவு, மக்கள் நள்ளிரவு ஆராதனைகளுக்குச் சென்றுவருவதற்குச் சோதனைச் சாவடிகளில் அனுமதியளிக்கப்படும் என பாதுகாப்புப் படையினர் அறிவித்துள்ளனர்.

சோதனைச் சாவடிகளில் வழமையான சோதனைகள் இடம்பெறும் என்றும் - மக்கள் நடமாடுவதற்கு அனுமதிக்கப்படுவர் என்றும் - அறிவிக்கப்பட்டுள்ளது. ஏனைய தினங்களில் இரவு 8மணிக்குப் பின்னர் மக்கள் நடமாடுவது கட்டுப்படுத்தப்பட்டிருகிறது.

மட்டக்களப்பு நகரில் புளியந்தீவு பெரியமாதா தேவாலயம், தாண்டவன்வெளி வியாகுலமாதா தேவாலயம் உட்பட கத்தோலிக்க தேவாலயங்களில் நள்ளிரவு ஆராதனை நடைபெறும்.

திருமலை, மட்டுநகர் மறைமாவட்ட ஆயர் கலாநிதி கிங்ஸ்லி சுவாம்பிள்ளை புளியந்தீவு மாதா தேவாலயத்தில் நடைபெறும் ஆராதனையில் திருப்பலி ஒப்புக்கொடுப்பார்.

இம்முறை விடுதலைப் புலிகள் யுத்தநிறுத்தத்தையும், அரசாங்கம் மோதல் தவிர்ப்பையும் அறிவித்திருப்பதால் மக்கள் மத்தியில் மகிழ்ச்சி காணப்படுகிறது. நத்தார், புதுவருட கொண்டாட்டங்களுக்கான ஆயத்தங்களை மக்கள் மிகுந்த உற்சாகத்துடன் செய்து வருகின்றனர்.

இராணுவக் கட்டுப்பாடற்ற படுவான்கரைப் பகுதியிலிருந்து பெருந்தொகையான மக்கள் நகருக்கு வந்து பொருள்களைக் கொள்வனவு செய்துள்ளனர். (ஐ-6-9)




விண்ணப்பித்து விட்டீர்களா ?
இன்னும் 8 நாட்களே உள்ளன

IIS இன் மாபெரும் புலமைப் பரிசில் திட்டம் - 2002

விண்ணப்பப்படிவம்

முழுப் பெயர் : ______ (விண்ணப்பதாரியின் பெயரை தரு கொடுக்க)

தபால் முகவரி : ______

அடையாள அட்டை இல: ______

போட்டிப் பரீட்சைக்கு தொற்ற விரும்பும் வலயம்

பாடம் | பெறுபேறு

மேலே என்னால் தரப்பட்ட விபரங்கள் அனைத்தும் உண்மையானது எனவும், இப்புலமைப் பரிசில் தொடர்பாக IIS இன் விதி முறைகளுக்கு உட்பட்டு நடப்பேன் எனவும் இதால் உறுதியளிக்கிறேன்

திகதி ______ விண்ணப்பதாரியின் கையொப்பம்

"கணனிக் கல்விக்கென தனித்துவம் வாய்ந்த நிறுவனம் IIS"

நவீன கணனிகள்
நம்பமுடியாத விலையில்



Pentium 4 (1.4 ,1.5,1.6 GHz)
PentiumIII 733, 866, 933, 1000 MHz

தரமான கணனிகளையும் கணனி உதிரிப்பாகங்களையும் நியாயமான விலையில், உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ளக் கூடிய ஒரே ஒரு நிறுவனம் IIS

கணனிகளைக் கொள்வனவு செய்யும் ஒவ்வொருவரும் 2 நபர்களுக்கு இலவசமான கணனிப் பயிற்சியை IIS இல் மேற்கொள்ள முடியும்.

IIS விற்பனைப் பிரிவு,
100, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
TP. No : 2831

ஆசிரியர்களை - விளம்பரங்கள் தீர்மானிப்பதில்லை
அவர்களின் திறமைகளே தீர்மானிக்கின்றன.

BARATHY - சித்தன்கேணி

மீண்டும் ஒரு புதிய பிரிவு ஆரம்பமாகின்றது.

தரம் 5 தொடக்கம் 11 வரை

எமது தனித்துவம் பெற்ற ஆசிரியர் குழுவினால்

| | | | |
|---|---|---|---|
| விஞ்ஞானம் | Mr. தேவா | தமிழ் | Mr. சின்னத்தம்பி |
| | Mr. பாலச்சந்திரன் | | Mr. துவரட்ணம் |
| கணிதம் | Mr. எஸ்.சிவரூபன் | சமயம் | Mr. தரன் |
| | Mr. சிவா | | Mr. சிறி |
| சமூககல்வி | Mr. ஜெகன் | வர்த்தகம் | Mr. யோகேஸ்வரன் |
| ஆங்கிலம் | Mr. விஜயபாஸ்கா | சுகாதாரம் | Mr. நிரோஜினன் |
| | Mr. ஹரிகரன் | | |

விசேட வகுப்பு

தமிழ் இலக்கியம் - Mr. சின்னத்தம்பி
ஆங்கில இலக்கியம் - Mr. ஹரிகரன்

சகல வகுப்புகளுக்கும்
அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளவும்.

(96242)

The Express Institute
Irupalai, Kopay.

O/L - 2001
மாணவர் கவனத்திற்கு

பரீட்சையை அடுத்து நிறுவனத்திற்கு சமூகம் தரும் நாள் ஜனவரி 2ம் திகதி காலை 09 மணி என மாற்றப் பட்டுள்ளதை அறியத் தருகிறேன்

-அதிபர்

புதிய வகுப்புகள்




பதிவுகள்- 27-12-2001ற்கு முன்
மேலதிக விபரங்களிற்கு
Director
STP 54A, Palaly Road, Kondavil, Jaffna
TP: 2674 e-mail: stpedu@sltnet.lk

யாழ்.பல்கலைக்கழக முல்லை மாவட்ட
வறிய மாணவர் கல்வி வளர்ச்சி நிதியத்திற்கு
நிதி சேகரிக்கும் முகமாக
எதிர்வரும் நத்தார் பண்டிகையை முன்னிட்டு
யாழ்நகரின் முன்னணிக் கலைஞர்களுடன்
யாழ்.பல்கலைக்கழக அனைத்துப்பீட முன்னணிப் பாடகர்களும்
இணைந்து வழங்கும்

"இன்னிசைக் கோலங்கள்"

இடம்:- லொயலாஸ் கல்யாண மண்டபம்
(சென்.பற்றிக்ஸ் கல்லூரி அருகில்)
காலம்:- 25-12-2001 (நத்தார் தினத்தன்று)
நேரம்:- காலை 10.00 மணி
மாலை 2.30 மணி

அனைத்து இசைப் பிரியர்களையும்
அன்புடன் அழைக்கின்றோம்

முல்லை மாவட்ட மாணவ ஒன்றியம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

(C/19917)

விளம்பர அனுசரணை:-
Institute of Informatics Studies (IIS)
100, Clock Tower Road, Jaffna.

25.12.2001 முதல் 14.01.2002 வரை
5% இல் இருந்து 25% வரை
சிறப்புத்தள்ளுபடி
அத்துடன்
ரூபா 1000 க்கு மேல் கொள்வனவுசெய்பவர்க்கு
விசேடகழிவு

அழகுசாதனப்பொருட்கள், அன்பளிப்புபொருட்கள், வர்ணப்படங்கள், கை,மேசை,சுவர்மணிக்கூடுகள், சென்ற்வகைகள்,Fevicryl & Acron Paint Items எவர்சில்வர்பொருட்கள், பிளாஸ்டிக்பொருட்கள், வாழ்த்துமடல்கள், லேஸ் வகை, மற்றும் பட்டின்,பக்கிள் கவறிங்செய்து பெற்றுக்கொள்ளவும்

சந்தியா மல்ரி கோட்யாட்

531, பருத்தித்துறை வீதி, நல்லூர்
பிரதான வீதி, பண்டத்தரிப்பு
(எமக்கு வேறு கிளைநிறுவனங்கள் இல்லை)


# மரண அறிவித்தல்

## திருமதி நாகலிங்கம் சின்னம்மா

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் யாழ்., பிறவுண் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகலிங்கம் சின்னம்மா கடந்த 20.12.2001 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற காசி - வள்ளிப்பிள்ளை தம்பதியினரின் மூத்த மகளும் காலஞ்சென்ற பிரபல கட்டட ஒப்பந்தகாரர் நாகலிங்கத்தின் (சேனாதிராஜா) அன்பு மனைவியும் நித்தியறஞ்சிதன் (பிரபல கட்டட ஒப்பந்தகாரர் - கொழும்பு), நித்தியறஞ்சினி, யோகராஜா (சாந்தன் - பிரபல கட்டட ஒப்பந்தகாரர் - பிள்ளையார் மெற்றல் கிரேசர் உரிமையாளர் - யாழ்.), சுமங்கலி, மங்களேஸ்வரி (பிரான்ஸ்), தனேந்திரா ஆகியோரின் அன்புத் தாயாரும் தேவிகா, தங்கவேல் (C.T.B., கணக்காய்வாளர், வவுனியா), வசந்தராஜா, புஸ்பமலர், வரதராஜா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஜெரின், திருவரன், கிருசாந்தன், நிரோஜன், ஜிலாந்தினி, அபிலாஸ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (24.12.2001) திங்கட்கிழமை பி.ப. 3 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.17, 5ஆம் ஒழுங்கை,*
*பிறவுண் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
நா.யோகராஜா
(சாந்தன்)

(96237)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 24.12.2001இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.